R. No. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா.

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, பவ-ஞு சித்திரை-மீ 31-உ (13—5—1934) | மலர் 25.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

3 அணா வெளியீடுகள்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:— இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது

பிரபஞ்ச உற்பத்தி:— இந்நூலில் பரிணம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

பிரகிருதிவாதம்:— இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

வெ. ரா. சொற்பொழிவு
விலை அணு 2,

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணு 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணு 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணு 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணு 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணு 2.

சோதிடப் புரட்டு
விலை அணு 2

பர்னார்ட்ஷா உபந்யாசம்.
விலை அணு 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணு.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணு.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	...	0—8—0
சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை		0—6—C
மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக ப்பிற்சி முறையும்	...	2—0—0
ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை	...	0—6—0
சுயராஜ்யம் யாருக்கு	...	0—1—0
சாமிகளின் அடிமைகள்	...	0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்	...	2—0—0
பகுத்தறிவு கீதம்	...	0—1—0
காந்தி கிட்டு	...	0—1—0

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்ற ...ள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அ...ப்பவேண்டும்.

...ள்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலை...

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிரு...ந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்...து

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது! **நமது புதிய பிரசுரங்கள் !!**

சோஷியலிசம.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணு 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணு. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பவும்.
50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

போல்ஷ்விக் முறை.

விலை அணு 1. தனிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

1—5—34ந் தேதியில் நடைபெற்ற பொன்மலை, திருச்சிராப்பள்ளி தென்னிந்திய இருப்புப்பாதைத் தொழிலாளர் சங்க மேநாள் விழாவில் தலைமை வகித்த தோழர் செ. தெ. நாயகம் அவர்கள் தலைமை உரை:—

தென்னிந்திய இருப்புப்பாதைத் தொழிலாளர் சங்க

மே நாள் விழா.

தோழர் செ. தெ. நாயகம் தலைமையுரை.

தென் இருப்புப்பாதைத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களே! மற்றத் தொழிலாளர்களே பிறதோழர்களே!

இன்று இவ்விழாவில் தலைமை புரிய என்னைக் கேட்கவேண்டுமென உங்கள் சங்கப் பொதுக்கூட்டம் கட்டளை இட்டதாக உங்கள் சங்கப் பொது அமைச்சர் தோழர் டி. கிருஷ்ணசாமி எனக்கு எழுதிய கடிதம் ஐந்து நாளைக்கு முன் எனக்குக் கிடைத்தது. உங்கள் சங்க நிலைமையை நேரில் தெரிந்த தோழர் ஒருவருடன் நான் கலந்த பொழுது உங்கள் வேண்டுகோளுக்கு இணங்குவது எனது கடமை என உணர்ந்தேன். உங்கள் சங்கப் பொது அமைச்சர் உங்கள் சங்கத்திற்காகத் தன்னையும் வெறுத்து விடாது உழைத்த வீரர் என அத்தோழரிடமிருந்து தெரிந்தேன். அவ்வேலையை நேரில் பார்க்க விரும்பினது நான் இங்கு வந்ததற்கு இன்னொருகாரணம். உங்களுடைய இன்றைய உழைப்பில் இவ்வளவு சிறப்புடன் கலந்துகொள்ள எனக்கு இடமளித்த உங்கள் அன்பிற்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

இச்சங்கம் 1918ல் நாகையில் ஏற்படுத்தப்பட்டதென்று இதன் முதல் தலைவர் தான் மரிக்கும் வரை இச்சங்கத்தைப்போற்றி வளர்த்த, நாகைக்குத் தன் காலத்தில் ஒரு அணிகலனும், எந்த நற்காரியத்திற்கும் ஒரு ஊன்றுகோலாயும் உறைவிடமாயுமிருந்த, பெரும் பணமும் பின்வாங்கா மன உறுதியும் ஒருங்கே படைத்த வெ. ப. பக்கிரிசாமி பிள்ளை என்றும், நாட்டின் நன்மைக்காகவும் சிறப்பாகத் தொழிலாளர் முன்னேற்றத்திற்காக உழைத்துவரும் தோழர்கள் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, திரு வி. கலியாணசுந்தர முதலியார், ஈ. வெ. ராமசாமியார், வி. எம். இராமசுவாமி முதலியார், முதலானவர்கள் சங்க முற்போக்கிற்காகவுங் காரியங்களில் அப்போதைக்கப்போது கலந்திருக்கிறார்கள் என்றுந்தெரியப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இச்சங்கம் தொட்டியில் வளர்கிறசெடிவேண்டிய அளவு வெயிலும் காற்றும், நீரும், உரமும் பெற்று வளருகிறமாதிரி வளரவில்லை. கோடை வெயிலுக்கும் ஆடிகாற்றுக்கும், ஐப்பசி மழைக்கும், தைப்பனிக்கும, அளவற்ற உரத்திற்கும், உரமே இலாத வறட்சிக்கும் உள்ளாகி வளர்ந்திருக்கிறது. மணற்பாங்கான கடற்கரையில் முளைத்துப் பொட்டலான குன்றடியில் பிடுங்கிநட்டப்பட்டிருக்கிறது. முளைத்த இடத்திலும் பிடுங்கிநட்ட இடத்திலும் ஒடிந்த கிளைகளும், வெட்டப்பட்ட கொப்புகளும், உதிர்ந்த இலைகளும், ஒடிந்த சுள்ளிகளும், அற்ற வேர்களுமே போய், ஆழத்துளைத்த ஆணி வேருடனும், பரந்து ஓடிய பக்க வேருடனும், உரத்த தூருடனும், துளிர்த்த இலைகளுடனும் வீறிட்டு வளர்கிறது. இத்துடன் முளைத்த பலகன்றுகள் கன்றிலே கருகினவும், செடியாகிச் செத்தனவும், சிறு மரமாகிப் பட்டனவுமாக மாய, இது மாத்திரம் பச்சை போகாது உயரத்திலும், பருமனிலும், வயிரத்திலும் பெருகி வளர்ந்து கொண்டே இருந்திருக்கிறது. பல வேறு மரங்களினடியில் தங்கிப் பழந்தின்ன எண்ணியவர்கள் எல்லாரும் அவைகள் பட்டவுடன் இம் மரநிழலுக்கு வந்தும், நடந்தும், ஓடியும் வந்து இம்மரத்திற்கும் உறுதியளித்துத் தாங்களும் பலனடைந்தார்கள். இம்மரமும் பட்டுவிடுமோ, பட்டு விட்டதோ என்று எண்ணியதுமுண்டு. நிழலிலிருந்தவர்களும் வழிபோக்கர்களும் பட்டமரத்தில் வெட்டினது மிச்சம் என்ற மனப் பான்மையைக் காட்டிய காலமுமுண்டு. இருப்புப் பாதை முதலாளிகள் இம்மரம் துளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்ததைப் பார்த்துப் பூரித்த காலமுமுண்டு. பழுத்த பழம் அவர்கள் சிற்றுண்டிக்கு உதவினதுமுண்டு. மரநிழலில் பலர் தங்கிப பேச்சும் கூரலும் தங்கள் காதை யடைத்த பொழுது அது தங்கள் மற்ற வேலைக்கு இடையூறாக இருப்பதாகக் கருதி முணுமுணுத்துச் சீறிப் பொங்கினதுமுண்டு. அதை வெட்டிச் சாய்க்க வாளும், கோடாரியும், கயறும் கொண்டு வரப்பட்ட பொழுது பராமுகமாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு உதவி செய்வார்களோ, செய்கிறார்களோ என்ற ஐயமும் ஏற்பட்டது. இதற்கெல்லாந் தப்பி இம்மரம் நமமெல்லாந் தங்க நிழல் தந்து வளர்வதைப் பார்த்தால் இதனிடம் யாருக்குத் தான் பற்று வராது. பெருகாது போகும் தஞ்சை நாட்டில் தென்னாட்டின் முது நகரம் நாகையில் முளைத்து வளர்ந்த பொருது அந்நகராண்மைத் தலைவர் வெ. ப. பக்கிரிசாமி பிள்ளை இதைப் போற்றி வளர்த்தது போல, திருச்சி காட்டில் கொண்டு நட்டவுடன் திருச்சி நாட்டாண்மைத் தலைவர், பெயர் பெற்ற வழக்கறிஞர், சென்னை சட்ட சபை உறுப்பினர், திருவாளர் ராவ் பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை இதன் காப்பாளரானதும், இதைக் கண்கணிக்க ஜில்லா கலெக்டர் வேண்டும் போது வந்ததும், இருப்புபாதைக்கு இச்சங்கம் அழகும், பணியும் செய்ய வல்லது தான் என முதலாளிமார்கள் தங்கள் செய்கையில் காட்கினதும் இச் சங்கத்தின் வளர்ச்சிக்கும் முற் போக்கிற்கும் ஐயம் போக்கும் அறிகுறிகளாம். இருப்புப் பாதை தொழிலாளர்கள், ஒருவர் விலக்கின்றி யாவரும் இதில் சேர்ந்து சங்கத்தையும் தங்களையும் பேணிக்கொள்ள வேண்டுமென்பது எனது ஆர்வம் நிறைந்த விருப்பம்.

இற்றைக்கு நாற்பத்தாறு ஆண்டுகட்கு முன் 1888 மே முதல் நாள், அமெரிக்க நாட்டின் நியூயார்க் நகரத் தொழிற் சாலை தொழிலாளிகள் நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் தான் வேலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்யக்கூடின நாள். அதற்கு எதிர்ப்பு இருந்தது இயற்கை. அவ்விதக் கூட்டங்களில் கலகங்களும், கல்லெறிகளும், தடி அடிகளும், துப்பாக்கி மரணங்களும் நடப்பதை, விலக்க முயன்றும், இதுவரை முற்றிலும் முடியாது போனது என்பது நான் தொழிலாளர்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டிய செய்தியல்ல. இப்பொழுது பம்பாயில் நடப்பது அதை நம்மனதில் ஏற்புறுத்தப் போதுமானதாகும். இறுதியாகத் தொழிலாளர்கள் இடுக் கண்களைக் களைந்து வெற்றியுற்றார்களென்பது, நியாயமே வெற்றிபெறும் என்றஉண்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இடுக்கண் செய்பவர்களை நோதல் அறிவுடைமை யல்ல. குற்றங்குறையில்லாதமக்களிலர், நமது குற்றங் குறைகளே நமக்கு இடுக்கண்கள் வருவதற்குக் காரணம். நம்மிடமிருந்த குற்றங் குறைகள் நீங்குவதற்கும் அவ்விடுக்கண்களே காரணமும் உதவியுமாம். அவ்விடுக்கண்கள் வராவிடில் நமது குறைகள் நம்மை விட்டு நீங்காமல் நம்மிடம் ஒட்டிக் கொண்டே இருக்கும். பெரும்பாலும அவைகள் பெருகவும் செய்யும். நம்மைவிட்டு அவைகளை அகலச் செய்ய இவ்விடுக்கண்களே உதவியாயுள்ளன என்பதை ஒவ்வொருவரும் தன்தன் வாழ்நாளில் தெளிவாய் அறியலாம். தொழிலாளரிடம் நாம் காணும் ஒரு பெருங்குறை ஒற்றுமையின்மை. அவ்வொற்றுமையை உண்டுபண்ண, ஒன்றுபட என்னும் நம் உள் முயற்சியோடு நம்மை ஒன்றுபடுத்தும் வெளி முயற்சியும் வேண்டியுள்ளது. அவ் வெளி முயற்சிதான் நமது ஒற்றுமைக் குறைவின் காரணமாக நமக்குப் பிறரால் வரும் இடுக்கண்கள். அவ்விடுக்கண்களை விலக்க இதுவரை ஒன்றுபடாத குறுகிய திறம் படைத்த மக்கள் பலர் ஒன்றுபடவேண்டி வருகிறது. மரத்தின் தூறும் கிளைகளும் பல்கோடிக் கணக்கான நுண்ணிய அணுக்கள், வற்புறுத்தி ஒட்டுவிப்பாரின்றி உள் முயற்சியால் ஒன்றுபட்டு, வலுத்துகோடாரியாவது, வாளாவது, சுத்தியலாவது இல்லாமல் பிரிக்கப்பட முடியாத நிலைமையை அடைகின்றன. மரங்களை வெந்நீரில் கொதிக்கவைத்துச் சீவிப் பிரித்து பலகைகளாக ஒட்டுவிக்கப்பட்டு (பிளைவுட் என்ற பெயருடன்) வருவதையும் பார்க்கிறோம். பிட்டால் வேறுபட்டு விடக்கூடிய மண்துண்டுகள், சிறு காற்றில் பறக்கிற மண் தூசுகள், தண்ணீருடன் கலந்து பிசைந்து கட்டியாக்கப்பட்டு சுடப்பட்டு ஒன்றுகூடி வலுவடைந்து வேகத்துடன் வீசினால் மண்டையை உடைக்கும் செங்கலாகவும், யானையையும் தாங்கக்கூடிய பாலமாகவும் உருப்படுவதை நாள்தோறும் பார்க்கிறோம். கற்பாரைகளிற் பலவும் ஒரு காலத்தில் குழம்பாகக் கொதித்துக் கட்டிப்பட்டவை எனச் சொல்லுகிறார்கள். மக்கள் ஒற்றுமைப்பட உள் முயற்சி போதியபடி இல்லாவிட்டால் வெளி வற்புறுத்தல் இல்லாமல் முடியாது என்ற நிலைமை வந்துதான் தீரும். அது மனதுக்கும் உடலுக்கும் கடினமாகத் தானிருக்கும். அவ்வொற்றுமை உள்முயற்சியால் பெற்று இதனால் வரும் நன்மையை அடையுங் காலம் பிந்திக்கொண்டே போவதை விட, வெளிவற்புறுத்தலால் ஒன்று படுத்தப்பட்டு அதன் பயனான நன்மையை விரைவில் அடைவது சிறந்ததல்லவா? நீடித்து சோம்பித் தூங்கியிருப்பவர்களைத் தட்டி அடித்து எழுப்புகிறவர்கள் நற்செயல் செய்பவர்களே ஆவார்கள். தொழிலாளருக்கு இடுக்கண் செய்து அவர்களை ஒற்றுமைப் படுத்தினவர்களையும், சோம்பித் தூங்கியிருந்தவர்களைத் தட்டி, அடித்து எழுப்பி, உடல், உறுப்பு, உள்ளம் முதலியவைகள் உரம்பெற வேலை செய்யச் செய்தவர்களையும் இந்நன்னாளில் வாழ்த்துவோமாக. வளர்கிற பச்சைமரம் உள் முயற்சியால் ஒன்றுபட்டு வலுத்து வளர்வது போல, ஒரு திறப்பட்ட மக்கள் நல்வழி செலுத்தப்பட்ட உள்முயற்சியால் வலுத்து வளரலாம் என்பதையும், உள்முயற்சி குன்றின், அல்லது நேர்வழி இன்றி மாறின், வெளிமுயற்சியால் இடுக்கண்களுக்கு ஆளாகி, ஒன்றுபடுத்தப்

பட்டு நேர்வழியில் சேர்த்து நடத்தப்படுவோம் என்ற நம்பிக்கையும் நம்மை ஊக்குவிப்பதாக.

தொழிலாளர் சங்கங்கள் ஆள் குறைப்புத் திட்டத்தையும், சம்பளக் குறைப்பையும் தடுத்து வேலை நேரக் குறைவையும், சம்பளம், கல்வி, அறிவு, வாழ்க்கை இவைகளின் உயர்வையும் பெரும்பாலும் முதலாளிகள் மூலமாகப் பெற உழைக்கின்றன- நமது முன்னேற்றத்திற்கு இந்த முயற்சி மாத்திரம் போதுமா, நாமாகவே நீக்கக் கூடிய குறைகள் நம்மிடம் எவையேனும் இருக்கின்றனவா, இருப்பின் அவை எவை, அவைகளை நீக்க வழி என்ன, முதலாளிகள் போன்ற வெளியார் உதவியின்றி நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்கு வழிகள் இருக்கின்றனவா, இருந்தால் அவை எவை, அவைகளை ஏன் இதுவரைக் கையாளாதிருந்துவிட்டோம். இனியேனும் கையாளலாமா, என்று இன்று உங்கள் முன் ஆராய விரும்புகிறேன்.

ஒவ்வொருவரும்தன்தன் காரியத்தைத்தான் தனியாகவாவது தன் இனத்தார்களுடன் சேர்ந்தாவதுமுடித்துக்கொள்வதுதான் சிறந்தவழி. அவ்வாறு எவ்வளவு தூரம் நம்காரியங்களை நாமே செய்து கொள்ளுகிறோமோ அவ்வளவுதூரம் நம்உள்ளத்தில் ஓர்மையும் வெளியில் பெருமையும் உண்டு. நம்மாலாகக்கூடிய காரியத்திற்கும் பிறரிடம் போய் கையேந்தி நிற்பது நமது திறமையை மழுக்கி நமக்கு குறைவு தேடிக்கொள்வதோடு நமது வேண்டுகோளை மறுப்பதற்கு அவர்களுக்கு வழிதேடிக்கொடுத்ததுமாகும். நம்மாலாகக்கூடியதை யெல்லாம் நாம் செய்து விட்டு நமக்குமிஞ்சியதையும் நாமே செய்ய வழிதேட முயன்றால் நாம் கேட்காமலே பிறர் பலர் நமக்கு உதவி செய்யப் போட்டிபோட்டுக் கொண்டு வருவார்கள், ஆகையால் நம்மாலாகக்கூடிய காரியத்தை எல்லாம் நாம் ஒவ்வொருவரும் தனித்தோ நம் இனத்தாருடன் சேர்ந்தோ செய்து முடிப்பதையே நம்முடைய முதற்கடமையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

மக்களுள் உழையாதவர்கள் கிடையாது. உழையாதவர்களுக்கு உணவு கிடையாது. உழைத்தும் பெற்ற பலனை அப்பொழுதே செய்து அழித்துவிடுவோரும் அப்பலனில் ஒரு பாகத்தை செலவுசெய்து மீதத்தை சேமித்து வைப்போருமாக மக்கள் இருதரத்தவர்கள் ஆவார்கள். சேமித்து வைத்தவர்கள் நாளடைவில் முதலாளிகளாகிப் பணத்தில் உயர்ந்து பண உதவியால் வாழ்க்கைஆட்சி முதலிய துறைகளிலும் உயர்ந்து உழைப்பின் பயனை அவ்வப்போது செலவு செய்து சேமித்து வையாத பெருமக்களை ஆளும்நிலைமைக்கு வருகிறார்கள். ஒருகாலத்தில் உழைத்தவர்கள் தங்களுக்கு வேண்டிய உணவு முதலியவைகளுக்கு தாங்களே உழைக்கவேண்டிய அவசியமின்றிப் பிறரை உழைக்க வைத் தங்களுக்கு வேண்டிய உணவு முதலியவைகளைப் பெற்றுக்கொள்ளும் நிலைமைக்கு வருகிறார்கள். உழைத்தே உணவு முதலியவைகளை தேட வேண்டியநிலைமையில் இருப்பவர்கள் தங்களுக்கும் உணவு முதலியவைகளுக்காக உழைக்க வேண்டாத மற்றவர்களுக்கும் சேர்த்து உழைக்க வேண்டியவர்களாகிறார்கள். இதுவே தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள பல சங்கடங்களுக்கும் காரணம். சேமிப்புத்திறமையும் இன்மையுமே மக்களுள் ஒருவர் மற்றவரைவிட உயர் பெறுவதற்கு ஒரு பெரும் முதற்காரணம். சேமிக்க முந்தியவர் பிந்தியவர்கள்மேல் பெரும் பளுவாயிருப்பதை விலக்குவதற்கும் அதுஉடனே முடியாவிட்டால் முடியும்வரைப்பளுவைக்கூடிய வரை குறைத்து கொள்வதற்கும் ஆர்வத்துடன் விரும்புகிறவர்கள் சேமிப்பு வழக்கத்தைக்கைக் கொள்வது தான் அவர்கள் செய்யவேண்டிய நேர்மையான முதல் வேலையாகும்.

சேமிப்புக்கு எளிதாக விளக்கக்கூடிய இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தான் இது வரை வழங்கப்பட்டிருக்கும் அல்லது விரும்பும் செலவுக்கு மேலான வரும்படி தேடுவது. இன்னொன்று தனக்குத்திட்டமாக ஏற்பட்டவரும் படிக்குள் குறைவாகச் செலவைச் சுருக்கிக்கொள்வது முந்தியதைவிடப் பிந்தியது பெரிதும் எளிதானது. முந்தியதற்குப் பிறர்கையை எதிர்பார்க்கவேண்டும், தன்னில் புறம்பான பல காரணங்களைக்கட்டுப்படுத்தவேண்டும். பிந்தியதற்குத் தனக்குத் தானே அடக்கிக் கொண்டாற் போதுமானது, வேறொருவரையும் எதிர்நோக்கவேண்டியதில்லை, தான் வழங்கப்பட்டிருக்கும் அல்லது விரும்பும் செலவு என்பதற்கு ஒரு எல்லைகிடையாது. தண்ணீர் உயர உயரத் தண்ணீரில் மிதக்கும் கட்டையும் உயருகிறமாதிரி வரும்படி உயர உயர வழக்கம் விரிந்து கொண்டும் விருப்பம் பெருகிக்கொண்டு போகும். செலவுக்குத் தக்க வரும்படி தேடுவதில் நம்முடைய தாழ்ந்த குணத்திற்கு நாம் ஆளாகி நம் அறிவைச் சிதற விட்டவர்களாகிறோம். வரும்படிக்குத் தக்க செலவைச் சுருக்குவதில் தாழ்ந்தகுணங்களை அடக்கி ஆளுந்திறனும் அறிவும் பெற்று உயர்கிறோம். ஆகையால் பிறர்கையை எதிர் பார்க்கும் வழக்கத்தை ஒழித்து வரும்படிக்குத்தக்கவாறு செலவைக் சுருக்கி நம்மை நாமே அடக்கி அறிவைப் பெருக்கும் வழக்கத்தில் உரம் பெறுவது நமது கடமையாகும்.

செலவைச்சுருக்க நோக்குங் கொண்டவர்கள் தான் காணும் ஒவ்வொரு செலவையும் நிறுத்த முடியாதா என்று அளவால் அளந்து பார்க்கவேண்டும். பிறர் மெச்ச வேண்டியதற்காகவோ நம் மூன்னோர்கள் செய்து வந்தார்கள் என்பதற்காகவோ, நாமே இது வரை செய்துவந்தோம் என்பதற்காகவோ நமக்கு விருப்பம் இருக்கின்றதென்பதற்காகவோ, அறிவால் அலசிப்பாராமல் செலவு செய்வது அறிவுடைமைக்கு உறுதியாகாது. நம்முடைய சடங்குச் செலவுகள் எல்லாம் மேலேசொன்ன இனத்தில் சேர்ந்தவைதான் சீமந்தம் காப்பிடல் காது குத்தல் படிக்க வைத்தல், மணம், இழவு, முதலியவை எல்லாம் அவ்வாறானவைகளே சோறூட்டலை எடுத்துக்கொள்வோம் நாள் பார்த்து நேரம்பார்த்து சோறூட்டுவதற்கு முன் ஒரு குழந்தை எத்தனை பருக்கை எவ்வளவு சோறு எவ்வளவு பண்டம் யார் யாரிடம் எல்லாம் வாங்கித்தின்று எத்தனை முறை வயிற்றாலேயும் போய் மருந்தும் புகட்டப் பட்டிருக்கிறது அப்படிப்பட்ட குழந்தைக்கு சோறூட்டுவதற்கென நாளும் நேரமும் பார்த்து நாமும் ஏமாந்து பிறரையும் ஏமாற்றிப் பணத்தையும் இழந்து வேறு வழியில் பணந்தேடத் திறனில்லாது நம்மிடம் பணம் பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து முட்டாள் பட்டமும் பெறுகிறோம் என்றால் அப்பட்டத்திற்கு நாம் உரியவர்கள் தானு இல்லையா என்று எண்ணிப்பாருங்கள். நாளும் நேரமும் பார்த்துப்படிக்க வைக்கப்படுகிற பிள்ளை அதற்குமுன் எத்தனை முறை அ ஆ இ ஈ சொல்லியும் எழுதியும் இருக்கிறான். அப்படி நாள்பார்த்து நேரம் பார்த்து படிப்பிக்கப்பட்ட பிள்ளைகளில் எத்தனை பெயர்கள் தங்கள் பெயர் கூட எழுதத்தெரியாமல் காலங்கழித்து மடிவதைப்பார்க்கிறோம். இவ்வித அறிவற்ற சடங்குகளும் பணச்செலவும் இல்லாமல் படித்த பிள்ளைகளில் எத்தனை பெயர் பத்துப்பெயர் பத்துலக்ஷம் பெயர்களை அடக்கி ஆளுந்திறனுடன் வாழ்கிறார்கள். கண்ணிருந்தும் குருடராய் பணத்தையும் செலவு செய்து தனது அறிவிலித்தனத்தையும் பறையடிக்கும் மக்கள் ஏழைகளாயும் அடிமைகளாயும் இருப்பது இயற்கைதானே. இதனால் பெருஞ் செலவு நேரிட்டு விடுகிற தென்றும் இவ்வொரு சிலவே அவர்கள் ஏழ்மைக்குக் காரணம் என்றும் நான் சொல்லவில்லை. இச் செலவில் துவக்கப்பட்ட அறிவை இழக்கும் வழக்கம், நாள் ஆக ஆக முற்றி அவர்களை ஏழ்மைபடுகுழியில் ஆழ்த்தி விடுகிறது. நமது மற்ற ஒப்பந்தங்களைப்பத்திரத்தில் எழுதிப் பதிவு செய்கிற மாதிரி நமது மணங்களையும் நாலைந்து ரூபாய்ச்செலவில் பதிவு செய்து கொள்ளச்சட்டம் இருக்கிறது. அப்படிப்பதிவு செய்யப்பட்ட மணமகளை மனைவியா வைப்பாட்டியா என்று வழக்குத் தொடர இடமில்லை. ஒரு மனைவி இருக்க இன்னொரு மனைவியை மணக்கும் கீழ் மக்கள் வாழ்வை அப்பதிவு மணச்சட்டம் தடுக்கிறது. கணவன் இறந்தபின் அவனுடனிருந்து அவனுக்கு உதவி செய்து சொத்து சேர்த்த மனைவி ஏழையாய்ப் பிச்சை எடுக்க எத்தனையோ தலைமுறைக்கு முந்தி உறவு பாராட்டும் உறவினர் சொத்தை ஆள் அச்சட்டம் இடங்கொடாது. பிறப்பால் கொள்கையால் பிளவுபடுத்தப்பட்டமக்கள் மறுபடி ஒன்று சேர அச்சட்டம் உதவுகிறது, இத்தனை நன்மைதரும் சட்டப்படிமணத்தைப் பதிவுசெய்வதை விட்டு விட்டு பணத்தை மணச்சடங்கில் வீணாக்குகிறவர்கள் தங்கள் செலவுக்கு வேண்டிய வரும்படி இல்லை என்று சொல்வது நேர்மையான முறைப்பாடாகுமா? இப்படியே சடங்குச் செலவுகள் எல்லாம் விலக்கப்படக் கூடியவைகளே. நம்மில் பெரும்பாலர் வறியர்களானதற்கு இவ்விதச் சடங்குச் செலவே பெருங்காரணம் என்பதை எந்த ஊர் கணக்கை எடுத்துப்பார்த்தாலும்விளங்கும். நாலு பெண் பிறந்த வீட்டில் சாதாங்கி மூளையுந்தங்காது என்பது இவ்வுதவியற்ற நிலைமையைப்பார்த்து ஏற்பட்ட பழமொழி. மணச்செலவிற்கும் இழவுச்செலவுக்கும் கடன் பட்டு கெட்டழிந்த குடும்பங்களைக்கணக்கிட்டுப்பார்த்தால் நம்மில் பெரும்பான்மையோரின் வறுமைக்கு நாமே ஆட்டாளி என்பது தெளிவாகும்.

சடங்கு முதலிய மூடச்செலவுகளுக்கு அடிமைத்த மக்கள் கடன்பட்டு கொடுக்கும் வட்டிச்சிலவாகும். தொழிற்சாலை தொழிலாளிகள்கடன்படுவதற்கு நியாயமேகிடையாது. பயிர்தொழில் செய்கிறவர்கள் கிணறு வெட்டவோ உரம் விதை வாங்கவோ எதிர்பார்த்த அறுவடை வராததாலோ கடன் படஇடமுண்டு. வியாபாரம் செய்கிறவர்கள் வியாபாரத்திற்கு முதல் முடக்கத்தை நீக்க கடன் வாங்க காரணமுண்டு. தொழிற்சாலைத்தொழிலாளிகள் அதிலும் குறிப்பிட்ட நாளில் திட்டமான தொகையை சம்பளமாகவாங்கும் இருப்புப்பாதைத் தொழிலாளிகள் போன்றோர் கடன் படுவதற்கு இடமே இருக்கக் கூடாது. ஒரு மாதச் சம்பளவரும்படி ஏறக்குறைய இவ்வளவு என்பது அவர்களுக்கு முன்னமே தெரியும். மாத வரும்படிக்குள் செலவைத் திட்டப்படுத்தி சுருக்கிக் கொள்ள வேண்டியது அவர்கள் கடமை. இந்நிலைமையில் அவர்கள் கடனாளி ஆக காரணம்என்ன? செலவை ஒழுங்கு படுத்த இரண்டொரு மாதம் தாழ்த்தலாம். நீடித்த காலமாக வருவாய்க்குமேல் செலவு செய்த கடன் படுவதென்றால் கடனைத்தீர்ப்பதற்கு ஒருவழியுமின்றி கண்மூடிக் கடன் பட்டுக்கொண்டு போகிறார்கள் என்றுநினைக்க இடமாகிறது. அல்லது ஊரிலுள்ள நிலைவும்படி போன்ற திட்டமில்லாத வேறுவரும்படியிலிருந்து கடனைதீர்த்து விடலாம் என்று நம்பி கடன் பட்டது போலாகிறது. இரண்டில் எது காரணமாயிருந்தாலும் அது நன்மாதிரியல்ல என்றே சொல்லவேண்டும். இன்னும் சிலர் நல்ல விலைவரும் பொழுது

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

டிரேட் யூனியன்கள்.

அதன் தோற்றமும் வளர்ச்சியும்.

(காலஞ்சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.)

ட்ரேட் யூனியன்கள் மகாயுத்தத்தில் சற்று பலமடைந்ததென்றே சொல்லவேண்டும். கவர்ண்மெண்டார் ட்ரேட்யூனியன் ஆபிசர்களையும் செக்டரிகளையும் சற்று மதிப்புடன் நடத்தினார்களென்பதிற்கு ஐயமில்லை. அனேக சில்லரை வசதிகள் ட்ரேட்யூனியன்களுக்கு சுலபமாக ஏற்படுத்தபட்டன. பார்லிமெண்ட் சபைக்கு ட்ரேட்யூனியன்களும், பொது உடமைக்கக்ஷிக்காரர்களுமாகச் சேர்ந்து அனேக மெம்பர்களை தெரிந்தெடுத்தனர். ட்ரேட்யூனியன் பணங்களை பார்லிமெண்ட் சபைக்கு மெம்பர்கள் அனுப்பிப்பதற்கு சிலவழிக்கக்கூடாதென்ற சட்டத்தை ஒருவாறு மாற்ற அவகாசமும் ஏற்பட்டது.

ஆனல் 1920ம் ஆண்டிலிருந்து இங்கிலாந்தினுடைய வியாபாரம் க்ஷீணிக்க ஆரம்பித்தது. மகாயுத்தத்துக்கு பின்பு மத்திய யூரோப்பா தேசங்கள்மிகவும்சீர்குலைந்திருந்ததால்,இங்கிலாந்தில் வியாபார மந்தம் ஏற்பட்டது. மேலும் ஆசியாகண்டத்திலும், அமெரிக்காவிலும் ஐரோப்பியர் யுத்தம் செய்து கொண்டிருந்த சமயத்தில், அனேக கைத்தொழில்கள் ஊர்ஜிதமாக ஸ்தாபிக்கப்பட்டு வளர்ச்சியடைந்திருந்தன. இங்கிலாந்திலும் யுத்தத்துக்கு [illegible]வண்டிய வெடி குண்டு இரும்பு, [illegible] மற்ற கைத்தொழில்கள் யு[illegible]மயத்தில் அதிக வளர்ச்சியடை[illegible] யுத்தமுடிந்த உடன் தங்களுடை[illegible] சாமான்களை விற்க முடியாமல் கஷ்டப்பட்டன.

இக்கஷ்டங்களெல்லாம் இங்கிலீஷ் ட்ரேட்யூனியன்களின் வளர்ச்சியை மிகவும் பாதித்தன. 1875ம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட சதியாலோசனையும் முதலை ரக்ஷிக்கும் சட்டப்பிரகாரம் வேலைநிறுத்தத்திற்காகஸிவில் சட்டத்திலும், கிரிமினல் சட்டத்திலும் ட்ரேட்யூனியன் மீதாவது, அதின் உத்தியோகஸ்தர்கள் மீதாவது தாவா கொண்டுபோக முடியாது. லார்டு ஜஸ்டிஸ் மௌல்டன் என்னும் நியாயதிபதி வேலை நிறுத்தத்தை நியாய வழிகளில் சட்ட விரோதமான காரியங்களை செய்வதற்கோ, அல்லது சட்ட விரோதமான காரியத்தை நியாயமான வழிகளில் செய்வதாகவோ ஏற்படவில்லையென்று தீர்ப்பு செய்தார். மேலும் 1906ம்வருடத்தில் நிறைவேறின ட்ரேட் சண்டை ஆக்ட் பிரகாரம் தொழிலாளிகள் நியாயமான சமாதானமான கலகமில்லாத வழிகளால் தொழிற்சாலைக்குள் போகும் தொழிலாளிகளை வேலைக்கு போகவிடாமல் தடுக்க முயலலாம். தவிர, கவர்ண்மெண்டே முதலாளியாகவிருக்கும் ட்ரேட்யூனியன்களில், மற்ற முதலாளிகளடியில் வேலை செய்யும் தொழிலாளிகள் கூட சேரலாமென்றும், இந்த ட்ரேட்யூனியன்களுக்கு மற்ற ட்ரேட்யூனியன்கள் போல் ராஜீய சமாசாரங்களைப்பற்றி கவனிக்க அதிகாரமுண்டென்றும், இந்த ட்ரேட்யூனியன்கள் ராஜீய விஷயத்தைமட்டும் கவனிக்கும் லேபர் கக்ஷியுடனும் ஒத்துழைக்கவுமிடமிருந்தது. மேலும் 1913ம் வருடத்து ட்ரேட்யூனியன் ஆக்ட்டின்படி, ட்ரேட்யூனியன்கள் தங்களுடைய பணங்களை ராஜீய விஷயங்களில் சிலவழிக்க ஒரு மகா சபை மீட்டிங்கில் அங்கீகரித்தபின்பு தான் சிலவழிக்க கூடுமென்றும், அந்த மீட்டிங்கில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம் ராஜீய விஷயங்களில் பணத்தை சிலவழிக்க இஷ்டப்படாத மெம்பர்களை பாதிக்ககூடாதென்றும் இந்த ராஜீய விஷயங்களுக்காக சிலவழிக்கப்படும் பண்டு தனியாகவிருக்க வேண்டுமென்றும், ஒரு ட்ரேட்யூனியன் மெம்பர்தான் ராஜீய பண்டுக்கு பணம் கொடுக்க இஷ்டமில்லையென்று நோட்டீஸ் கொடுத்த பின்பு அவரை தொந்திரவு செய்யக்கூடாதென்றும் சட்ட மேற்படுத்த பட்டிருந்தது.

1926ம் வருடத்தில் வெகு காலமாக மிகத்துயரங்களை அனுபவித்து வந்த நிலக்கரி சுரங்க வேலையாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் தங்கள் வேலையை நிறுத்தியுது மல்லாமல், தேசத்து கூலி ஆட்கள் அனைவரையும் தங்களோடு சேர்ந்து வேலை நிறுத்தம் செய்ய பிரார்தித்தனர். ரயில், மோட்டார், ட்ராம், பருத்திவேலை, இரும்புவேலை, பெரும் ஆலைகளில் வேலை செய்தவர்கள் அனைவரும் ஒப்பந்தமாக நின்று விட்டனர். துறைமுகங்களில் இறக்குமதியும், ஏற்றுமதியும் அடியோடி நின்று விட்டது. தபால் டிபாட்மெண்டும், தந்தி டிபார்ட்மெண்டும் ஒரு வேலையும் செய்ய முடியாமல் தவித்தன. ரயில், ட்ராம் இவைகளை உபயோகித்து ஆபீஸ்களுக்கு போகவேண்டியவர்கள் தெருக்களில் சாரி சாரியாய் நடந்து சென்றனர். தினசரி பத்திரிகைகள் ஒன்றும் வெளி வரவில்லை.

இங்கிலாந்தில் அப்பொழுது கனம் பால்ட்வின் பிரதம மந்திரி. அவர் தேசமுழுவதும் வேலை நிறுத்தம் ராஜத்துரோகமென்று பேச ஆரம்பித்தார். சர்ஜான் சைமன் என்னும் பிரஸித்தி பெற்ற வகீல் பொது வேலை நிறுத்தத்தை சட்ட விரோதமான காரியமென்று பிரரேபித்தார். பால்ட்வின் கவர்ண்மெண்டுக்கு புதிய ருஷ்யாவில் நடக்கும் பொது உடைமை கக்ஷியும், மூன்றாவது இன்டர் நாஷனலின் உலக தொழிலாளர்களுக்கு செய்யப்படும் விளம்பரங்களும் மிகவும் அனுகூலமாகவிருந்தது.

பொதுவேலை நிறுத்தம் சீக்கிரத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஒரு பக்கம் கன்சர்வடிவ் கக்ஷியின் இடிமுழக்கமும் மற்றொரு பக்கம் பொது உடைமை கக்ஷியில் பூரண நம்பிக்கையில்லாத திரு ராம்சேமாக்டனல்டை போன்ற தலைவர்களுமிருக்க் எப்படி தொழிலாளிகள் வெற்றி பெறக்கூடும்? ஒரு வாரத்தில் தொழிலாளிகள் வேலைகளை எல்லாம் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

பொது வேலை நிறுத்தம் சுதந்திரம் ட்ரேட்யூனியன்கள் கைகளில்இருக்கக்கூடாதென்று முதலாளிகள் கண்டு கொண்டனர். ஆகவே அதற்கு தகுந்த சட்டங்களை ஏற்படுத்தி பொது வேலை நிறுத்தமென்னும் பேச்சேஎழவொட்டாது ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பார்லிமெண்ட் சபையில் 1927ம் ஆண்டில் ஒரு புது ட்ரேட் யூனியன் ஆக்ட் நிறைவேற்றப்பட்டது.

அந்த புது சட்டத்தின் முக்ய அம்சங்கள் பின் வருபவை:-

1. ஒரு ட்ரேட்யூனியனும் தன் தொழிலிலேயே ஏற்படாத மனஸ்தாபத்திற்காக கவர்மெண்டிற்கு எதிராகவோ, பொது ஜனங்களின் ஒரு சாராருக்கு எதிராகவோ வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. இந்த சட்டத்தின்படி சுரங்க வேலையாட்கள் கஷ்டத்திற்காக ரயில் வேலை ஆட்கள் நின்று கொள்ளக்கூடாது.

2. ராஜீயவிஷயங்களுக்காக ட்ரேட் யூனியன்கள் வேலை நிறுத்தம் செய்ய கூடாது. நிலக்கரி சுரங்கங்களில் வேலை செய்பவர்கள் நிலக்கரி சுரங்கங்களை பொது உடைமைகளாகச் செய்ய வேலை நிறுத்தம் செய்யகூடாது. இங்கிலாந்தில் நிலக்கரி வியாபாரம் க்ஷிணிக்காமலிருப்பதற்கு இதைத்தவிர வேறு வழியேயில்லை என்று நிபுணர்களின் அபிப்பிராயம். ஆனல் இந்த நல்ல காரியத்தை வேலை நிறுத்தம் மூலம் பலாத்காரமாகசெய்யச்சொல்ல ட்ரேட்யூனியன்களுக்கு அதிகாரமில்லை.

3. சட்டவிரோதமானவேலைநிறுத்தங்களில் கலந்து கொள்பவர் அந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்று தெரியாமலிருந்தபோதிலும் தண்டனைக்குள்ளாவார்கள்.

4. ட்ரேட்யூனியன் பணங்கள் சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தால் ஏற்படும் நஷ்டத்திற்கு பறிமுதல் செய்யப்படலாம். இது பழைய டாப் வேல் கேஸில் தீர்ப்பு சொன்ன பிரகாரம்- ....

5. சாந்தமாகவும் பலாத்காரமில்லாமலும் தொழிலாளிகளை வேலைக்கு போகவொட்டாமல் தடுப்பதைப் பற்றி சற்று கடுமையான சட்டங்கள்

6. ராஜீயசம்பந்தமாக ட்ரேட்யூனியன் வேலைகள் முற்றிலும் நிறுத்தும்படி சட்டம். ராஜீய பண்டுக்காக கட்டணம் கொடுக்க தயாராகவிருப்பவர் தான் கொடுக்க இஷ்ட படுகிறதாக எழுதிக்கொடுக்கவேண்டும். முன்பு தான் கொடுக்க இஷ்டப்படாததாகத்தான் எழுதிக்கொடுக்கவேண்டும். இது அமுலில் மிகக்கஷ்டத்தைக் கொடுக்குமென்பதற்கு ஐயமில்லை.

7. கவர்ன்மெண்டே முதலாளியாகவிருக்கும்தொழில்களில் ட்ரேட் யூனியன்கள் மற்ற முதலாளிகள் தொழிற்சாலைகளிலோ ஸ்தாபனகளோ வேலை செய்பவர்களை சேர்த்துக்கொள்ளக்கூடாது. அந்த ட்ரேட் யூனியன்கள் ராஜீய கட்சிகளின் அமைப்புகளோடும் சேர்த்து ஒத்துழைக்கக்கூடாது. மேலும் அந்த டிரேட யூனியன்கள் எல்லா தொழிலாளிகளுமாக ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ட்ரேட் யூனியன் காங்கிரசுக்கு பிரதிநிதிகள் அனுப்பவாவது பண உதவி செய்யவாவது கூடாது. இந்த சட்டத்தால் கவர்ன்மெண்டுக்கு ரயில்வேயாவது, ஆலைகளாவது சொந்தமாகவிருந்தால், மற்ற ரயில்வே தொழிலாளர்களுடன் கவர்ன்மெண்ட் ரயில்வே தொழிலாளர்கள் சேரவும் கூடாது, ஒத்துழைக்கவும் கூடாது.

மேற்படி சட்டங்கள் மிகவும்அக்கிரமமானவை என்பதில் சற்றும் ஐயமில்லை. ட்ரேட் யூனியன்களின் வளர்ச்சிக்கு இவை பெரிய முட்டுக்கட்டை போட்டு விட்டன. இந்தியாவிலும் பெரும்பாலும் இதே சட்டத்தைக் கொண்டுவர முயலப்பட்டது. ஆனல் தொழில் கக்ஷிகள் சற்றும் சோர்வு அடையப்போவதில்லை. நியாயம் அவர்கள் பக்கம் தானிக்கின்றது என்று சொல்லவும் வேண்டுமோ?

ரஷ்யாவில் பாதிரிகள்.

ரஷ்யாவில் இன்றைய பாதிரிகளின் நிலைமை மிக மிக மோசமாகவும், பரிதாபப் படக்கூடியதாகவும் இருக்கிறதென்பது உலகிலுள்ள ஒவ்வொருவரும் அறிந்த தொன்றும். அங்குள்ள விஷயங்களைநேரில் காண்பதற்கியலாதார்கள் பத்திரிகை வாயிலாகவேனும் அறிய ஆவலுள்ளவர்களாயிருப்பார்களென்பதற்கையமின்று. ரஷ்யாவில் நடக்கும் ஒவ்வொரு விஷயங்களை ஒவ்வொரு தேச மக்கள் அறிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதே அறிஞர்களின் பொன்னன அபிப்பிராயமாகும்.

ரஷ்யாவைப்பற்றி லண்டன்

கடவுளுணர்ச்சியும், மதப்பற்றும்.

(திருச்சி, ஹாஜி சு. மோ. சாஹிப்)

மனிதன் என்றால் பகுத்தறிவு நிறைந்தவனே மனிதனாவான். முஹம்மது நபியவர்கள் காலத்தில் அவர்களுடைய புரட்சியை எதிர்த்து அவர்களை வதை செய்து வந்த அரபிகளை நாம் முஸ்லீம்கள், மனிதர்களென்று கருதுகின்றோம்? இல்லை, 'இப்லீஸ்' என்றும் 'காபிர்' என்றுமல்லவா தூஷிக்கின்றோம் என்? அந்த அரபிகள் பகுத்தறிவற்றவர்களாக விருந்தனர். நல்லது எது, பொல்லாதது எது என்று உணரக் கூடாதவர்களாக விருந்தார்கள், தங்கள் பண்டைப் பழக்க வழக்கங்களையே சிலாகித்து வந்தனர். அப்பழக்க வழக்கங்கள் மனித முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருந்தது. அவை அப்பழக்க வழக்கங்கள் ஏழைகளை தரித்திரர்களாகவும், அடிமைகளை சதா அடிமைகளாகவும், பணக்காரர்களை சதா தனவந்தர்களாகவும் வைத்துக் கொண்டு வந்தது. சமாதானமின்றி, சாந்தியின்றி மக்கள் சதா கவலையில் ஆழ்ந்திருந்தனர். இந்நிலையில் நபி முகம்மது நபியவர்கள் தோன்றினார்கள். இவர்கள் தற்குறிப்பேர் வழியாக வளர்ந்து மடிந்திருந்தும் பகுத்தறியும் சக்தி பரிபூரணமாக பெற்றவர்களாக விளங்கிவந்தார்கள். தன் சமூக மக்களிடையிருந்த சமாதானக் குறைவை நுட்பமாக உணர்ந்தார்கள். அதைப் போக்க வேண்டியது தங்களது கடமையென்று கொண்டார்கள். சமாதானக் குறைவுக்கு காரணமென்னவென்று ஆராய்ந்தார்கள். பகுத்தறிவின்மையே இதற்குக் காரணமென்று உணர்ந்தார்கள். பகுத்தறிவின் அவசியத்தை உணரும்படி செய்ய பகுத்தறிவுக்குப் புறம்பான பழக்க வழக்கங்களைத் தாக்கி பிரசாரம் செய்தார்கள். பின்னர் கிளர்ச்சி செய்தார்கள். நாளடைவில் கிளர்ச்சி முற்றிப் புரட்சி செய்தார்கள். இறுதியாக புரட்சி முற்றி அவசியத்தின் பேரில் போரும் செய்தார்கள். பிரசாரம், கிளர்ச்சி, புரட்சி, போர் இவைகளுக்குப்பின் கோரிய சமாதானத்தை நிலைநாட்டினார்கள் இதை யுணர்ந்து உலம்போற்றும் பெரியார் பர்னாட்ஷா இந்தக்கைநாட்டு காட்டரபியையேத் தான் இன்றைய உலக சமாதான மகாநாட்டுத் தலைவராக பிரரேபனை செய்திருக்கின்றார்கள். பகுத்தறிவற்று தங்கள் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்து வந்தவர்களும், தனிவுடமைக் கொள்கையால் வறுமையில் பெரும்பாலார், வாழ்ந்து வந்துத் தங்கள் குழந்தைகளைக்கொன்று வந்தவர்களும், பெண் இனத்தினரை மாற்றுப் பண்டமாக மாற்றியும் சந்தைகளில் விற்றும் வந்தவர்களும், இளைத்தவர்களை அடிமைகளாக்கி வந்தவர்களும், கண்டதையும் கடையதையும் வணங்கி வந்தவர்களும், மனித இரத்தத்தை அற்ப காரணங்களுக்கெல்லாம், ஜலமே போன்று சிந்திவந்தவர்களும் இறுதி நபியெனப்படும் முஹம்மது நபியவர்கள் செய்த புரட்சியின் பயனாக உலகத்துக்கே ஓர் முன் மாதிரியான மனித ஜாதியார்களாக 12 நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய பாலைவான அரபிகள் விளங்கினார்கள் என்று சரித்திரங்கள் கூற, ஆராய்ச்சியாளர்கள் புகழ, நாம் படித்தும் கேட்டும் பெருமை கொள்ளுகின்றோமல்லவா?

ஆனால்!

இன்று, முஸ்லீம்களாகிய நாம் மனித முன்னேற்றத்துக் கிடையூறாக விருந்து வருகின்றோம் என்று அதே ஆராய்ச்சியாளர்கள் இகழ்கின்றார்கள். என் ? வெறும் கடவுள் பக்தியும் மதப்பற்றுமே, என்று நான் கீழே நிரூபிக்கப் போகின்றேன்

நான் ஒரு நாஸ்திகனாக விருக்க வேண்டுமென்று பகுத்திறிவு வளர்ச்சியற்ற முஸ்லிம் சமூகம் கொள்ளலாமா? இல்லை, இல்லை, இல்லை. நான் இப்பொழுது ஓர் பக்கா ஆஸ்திகனாகவிருக்கின்றேன்(?) குடிஅரசு, புரட்சி முதலிய சு.ம. பத்திரிகைகளில் எழுதுபவர்களை வரும் நாஸ்த்திகர்கள் என்று கொள்ளுவது, அதில் வெளியாகும் விஷயங்களைத்தும் பொய்யும் புரட்டும் என்று கொள்ளுவதும் ஆஸ்த்திகர்களின் கூற்றாகவிருப்பதை யான் அறிவேன். மேலும் சு. ம. ப்பத்திரிகைகளில் இடம் பெறுபவர்கள் எல்லாம் மத பக்தியற்ற, மதத்தைத் துறந்த தறுதலைகளும் தான்தோன்றிகளும் என்றுதான் மதிக்கப்பட்டு வருவதையும் யான் உணர்வேன். இஃது தப்பிப்பிராயமென்பதை நீங்கள் இந்த வியாசத்தினாலாயே உணர்ந்துகொள்ளக் கிடக்கின்றது. நான் ஓர் பக்கா முஸ்லிமாகவே இருக்கப்பிரியப்படுபவன் என்பதைத்தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நான் இறுதி நபி முஹம்மது நபியவர்களையே என்னுடைய தலைவராகக் கொண்டதுடனில்லாது அவர்களையே என்னுடைய கூற்றுகளுக்கெல்லாம் ஆதாரமாகக் கொண்டு வருகின்றேன் என்பதை ஆராய்ச்சி அறிவு நிறைந்த முஸ்லிம்கள் போகப் போகத் தெள்ளென விளங்கிக்கொள்ளுவார்கள். மதத்தையும் கடவுளையும் சு. ம. த்தலைவர்கள் ஒழிக்கப் பாடுபடுவதெல்லாம் மனிதமுன்னேற்றத்தை முன்னிட்டேயாகும். அவர்கள் அப்படி அபிப்பிராயப்படுகின்றனர். தோழர் எம். சிங்காரவேலனார் கடவுள் இல்லையென்று நிரூபிக்க விஞ்ஞான நிபுணர்களைப் பின்பற்றுகிறார். வேறு சிலவிஞ்ஞான நிபுணர்கள் இதை மறுக்கின்றனர். அபிப்பிராய பேதமென்பது உலக இயற்கையாகும். அபிப்பிராயபேதம் இல்லாவிட்டால் உலகம் இந்நிலையை அடைந்திராது. மனித முன்னேற்றத்துக்கு அபிப்பிராயபேதம் இன்றியமையாததாகும். என்றாலும் இப்பொழுது மனித முன்னேற்றத்துக்கு இடையூறாக இருப்பது மதமும் கடவுள்களுமே என்பதை நாம் மறுக்கக் கூடவில்லை. இந்த உண்மையை சந்தேகமின்றி சு. ம. க்காரர்கள் நிரூபித்து விட்டனர். பெருகிக்கிடக்கும் மத பக்தர்களும், ஆஸ்திகர்களும் இந்த உண்மையை வெற்றியுடன் மறுக்காமலிருக்கின்றனர். என்? உண்மையிலேயே மதத்தின் பேராலும், கடவுள்களின் பெயராலுமல்லவோ மனிதர்களிடையில் முன்னேற்றங்குன்றி ஏற்றத்தாழ்வு அதிகரித்து உலகில் சமாதானங்குலைந்து உலகம் தரித்திரர்கள் நிறைந்ததாகவும், சிறுபான்மை செல்வவான்கள் பெருகிவருவதும் இன்று காணக்கிடைக்கின்றது. இவ்வுண்மை எப்பொழுது மறுக்கப்படவில்லையோ; மறுக்கப்பட்டு இவ்வுண்மை பொய்யாக்கப்படும் வரையில் சு. ம. க்கார[illegible]ளின் கூற்றுநிலைத்து நிற்கு[illegible]. இதையொட்டியே யாறும் எ[illegible]ராய்ச்சியின் பயனை இங்கு [illegible] சமூகம், இல்லை மனித சமூகத்தின் நன்மைக்கென்றே [illegible] பழுதத் துணிந்தனன் [illegible]

வெகு பல மதப்பித்து பிடித்த முஸ்லிம் முல்லாக்கள் தங்கள் சமூக ஊழல்களை வெளியிடக்கூடாது என்று என்னிடம் கூறியிருக்கின்றனர். பின் என் செய்வதென்றால் அந்தரங்கத்திலேயே சமூகத்துக்குள்ளேயே அந்த ஊழல்களை நீக்கப்பிரயத்தனப்படவேண்டுமாம். இதர சமூகத்தினர் தன் சமூக ஊழல்களை அறியும்படி செய்யக்கூடாதாம். அறிந்தால் கௌரவம் போகுமாம். இகழ்வார்களாம். இதற்காதாரமாக இவர்கள் ஒரு உதாரணத்தைக் காட்டுகின்றார்கள். ஒரு குடும்பப் பெண் விபசாரியாக யிருந்தால் எப்படி அக்குடும்பத்தினர் அதை வெளிப்படுத்தாமல் மறைவாகவே வைத்துக்கொண்டு கூடுமானால் பரிஷ்காரந் தேடுகின்றனரோ, அதேபோல சமூக ஊழல்களையும் இதரர் அறியாவண்ணம் மறைத்து வைக்க வேண்டுமென்பார். சமக ஊழல்களை உலகறிய பகிரங்கப் படுத்துவதின் நற்பலன்களை இப்பொழுது நாம் அடைந்துவருகின்றோம். ஒரு சிலர் நம் சமூக ஊழல்களை நம் சமூகப்பத்திரிகைகளில் வெளியிடுவதே உத்தமமென்கின்றனர். உண்மையேயானாலும் தமிழ் முஸ்லிம் சமூகம் மூர்க்க சமூகமாக விருக்கின்றது. தன் சமூக ஊழல்களை வெளியிடுபவர்களை வதை செய்யத் தயாராக

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க

நகர சர்வகலாசாலை ரஷ்ய பாஷா இலக்கிய பண்டிதர் சேர் பெர்னட்பிரேஸ் "லண்டன் டைம்ஸ்"ல் பின்வருமாறு எழுதுகிறார்.

சோவியத் ரஷ்யாவில் ஆலய வழிபாடுகள் வெறுக்கப் பட்டு தேசமக்களால் கண்டிக்கப் பட்டு அதைத் தடுக்க ஓர் சட்டமும் நிறைவேறியிருக்கிறது. அச்சட்டத்திற்கு விரோதமாக ஆலய வழிபாடு நடத்திய கத்தோலிக்க குருமார்களின் கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவிப்பதுண்டு.

ஆலய வழிபாட்டால் சட்டத்திற்குள்ளாகி தண்டனைக்குள்ளானவர்கள் தொகை 42 ருஷிய குருமார்களும் 248 கத்தோலிக்க குருமார்களென்று, அங்கிருந்து தப்பியோடிவந்த ஒரு குருமார் கண்ணீர் விடுகின்றார். அந்தோ! இக் குருமார்களின் ஆராதனையும் பூஜைகளும் எங்கே?

கத்தோலிக்கரின் தொகை.

1917 ம் வருடத்தில் ருஷிய சக்கிராதிபத்தியத்தில் கத்தோலிக்கரின் ஜனத் தொகை ஒரு கோடியே முப்பதுலட்சம்.

தற்போதைய கத்தோலிக்கரின் தொகை 15 லட்சத்திற்கும் 30 லட்சத்திற்கும் மத்தியில் இருக்கிறது.

கோவில்கள்:

திறக்கப்படாத கோவில்கள்- 581 (சிறிய கோவில்கள்)

திறந்தபடியிருக்கும் கோவில்கள்- 183 (பெரிய கோவில்கள்)

1931 ம் வருடத்தில் மூன்று கத்தோலிக்க மேற்றிராணிகளும் 200 கத்தோலிக்கக் குருமார்களும் மோஹிபர் டிஸ்டிரிக்டிலே பதினொரு கத்தோலிக்கக் குருமார்களும் வொரெனெஸ் மாகாணத்திலுள்ள மரங்கள் தறிக்கும் காம்பிலே பலவந்த வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களென்று சென்ற மாசி மாதம் உவாஷோ நகர் அறிக்கையொன்று கூறுகிறது. இக் குருமார்களில் ஒருவர் 81-வயதுடையவர்.

கொடுங்கோன்மை.

இது எப்பொழுது ஒழியும்?

(T. D. கோபால்)

மாலை 5-15 மணிக்கு சென்னை எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து புரப்படும் ஓர் வண்டி, ஸ்டேஷனை விட்டு மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கும் பொழுது ஜெயராமன் வெகுதுரிதமாக ஓடி வந்து, ஓர் வண்டியின் கதவைத் திறந்து, அவ் வண்டியில் அமர்ந்தான். அவன் சென்னையிலிருக்கப்பட்ட ஓர் இன்ஜினீயரிங் கம்பெனியில் வேலை செய்து கொண்டு வருபவனாதலால், வாரத்திற்கு ஆறு நாட்கள் அவன் அவ்வண்டியில் பிரயாணம் செய்வது வழக்கம். அன்றும் வழக்கம்போலவே அவன் தன்னுடைய வீட்டிற்கு இரவு 7 மணிக்கு வந்து சேர்ந்தான். அவனுடையவருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய மனைவி அவனை அன்புடன் வரவேற்று உபசரிக்க, அவனோ வழக்கத்திற்கு மாறாக அன்று தகுதியான பதில் அளியாமல், விசனத்துடன் முணுமுணுத்துக்கொண்டே உள்ளே சென்று விட்டான். திருப்திகரமான போஜனம் தயாரிக்கப்பட்டு, அவனுக்காக காத்துக்கொண்டிருந்தது. அவன் அந்த சாப்பாட்டை, தன் மனைவியுடன் ஒருவித வார்த்தையுமர்டாமலே, சாப்பிட்டுவிட்டு எழுந்திருந்தான். இவனுடைய இத்தகைய விபரீதமான நடத்தையை அன்று புதிதாகக் கண்ட அவனுடைய மனைவி மிக்க வியாகூலமடைந்து, அவன் சாப்பிட்டு முடிந்தபிறகு அவனுடைய விசனத்திற்கு ஏது காரணமென வினவ ஆரம்பித்தாள்.

“வேதம்! இந்த உலகம் ஓர் அழகிய இடமேயாகும். ஆனால், உலகில் வசிக்கும் மக்கள் யாவரும் சுயநலக்காரர்களாகவும், கொடுமைக் சாரர்களாகவும், துஷ்டர்களாகவுமேதான் காணப்படுகின்றார்கள். சென்னையை விட்டு வண்டி புரப்பட்டு, அனேக அழகிய பிரதேசங்களைக் கடந்து இவ்விடம் வருகின்றது. வண்டி செல்லும் வழியில் கண்களுக்கினிமையையளிக்கத்தக்க மனோரம்மிய காக்ஷிகள் பல நிறைந்திருக்கின்றனவென்பது உனக்கும் நன்றாகவே தெரியும். வருடத்தின் இந்த பருவத்தில் மரங்கள் யாவும் இளந்தளிர்களால் சூழப்பட்டு மிக்க அழகாக விளங்குகின்றன. குன்றுகளிலும், பள்ளத்தாக்குகளிலும் சப்தமென்பதே சிறிதுமில்லாமலிருக்கின்றது. இக்காட்சியை நான்பார்த்துக்கொண்டே வரும்பொழுது என்னுடைய மனமானது என்னையுமறியாமல் அந்த இடத்தையே நாடிச்சென்று கொண்டிருந்தது. அவ்வாறாக என் மனம் இயற்கை வனப்பினால் கவரப்பட்டிருந்த போதிலும், திடீரென அச்சமயத்தில் என் மனதில்நம்முடைய நிலைமையைப்பற்றியும், நம்மைச்சுற்றிலுமிருக்கக்கூடியவர்களின் நிலைமையைப்பற்றியும் ஓர் எண்ணம் உதித்தது. இயற்கை வனப்பைக் கூட நாம் கண்டு, ஆனந்திக்க வழியில்லையே. நம்முடைய வாழ்க்கை நாயினும் கொடியதாகவன்றோ இருக்கின்றது” என, தன் மனைவியிடம் கூறிக்கொண்டே விசனித்தான். அப்பொழுது அவனுடைய கண்களினின்று நீர் பெருகி, வழிந்தோடிக்கொண்டிருந்தது.

“அன்பரே! தாங்கள் எதற்காக விசனிக்கவேண்டும்? அன்று எழுதியவன் இனி அழித்தெழுதவா போகின்றான்? அதுவோ இல்லை. ஆகையால் நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். இதற்காகத் தாங்கள் விசனப்பட்டு, அழுவதால் ஏதாகிலும் பிரயோசனம் உண்டா? அன்பரே! வேண்டாம். வேண்டாம்” என கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள் அவனுடைய மனைவியாகிய வேதம்.

“வேதம்! நீ உரைப்பது உனக்கு நியாயமாகத் தோன்றுகின்றது. ஏனெனில், நீ அவ்வாறு போதிக்கப்பட்டிருக்கின்றாய். ஆகையினால்தான் நீ வேதாந்தம் பேச ஆரம்பித்து விட்டாய். ஆனால், நீ உரைப்பது எவ்வளவு அபத்தமென்பதை இன்னும் அறிந்துகொள்ளவில்லை. உன்னுடைய அறியாமைக்காக நான் மிகவும் விசனிக்கின்றேன். எல்லாப் பெண்களும்—ஏன்? ஆண்களிலும் கூட அநேகர், இத்தகைய நியாயத்தையேதான் பேசுகின்றார்கள். ஆனால், அவர்கள் யாவரும் இந்தப்பாழும்மதபோதகர்களாலும், மத குருக்களாலும் எவ்வளவு தூரம் ஏமாற்றப் பட்டிருக்கின்றார்களென்பதை இன்னும் உண்மையாகவே அறிந்து கொள்ளவில்லை. இன்று மாலை நான் சென்னையிலிருந்து இவ்விடம் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பொழுது, ஓர் பத்திரிகை அகஸ்மாத்தாக என்கரங்களுக்குக் கிட்டியது. அப்பத்திரிகையில், மக்கள் எவ்வாறு தங்களுடைய நிலைமையில்திருப்தியுடன் வாழ்ந்து வருகின்றார்களென்பதை, ஓர் அறிவுள்ள மனிதன் திரட்டி, எல்லாருக்கும் பயன்படும்படியாக வெளியிட்டிருக்கிறான். அந்த மனிதன் இத்தகைய விஷயங்களை எப்படித் தான் அறிந்து, வெளியிட்டானோ தெரியவில்லை. அப்பத்திரிகையில் காணப்படும் விஷயங்களின் சாராம்சம் யாதெனில்:—

“ஒரு சில மக்கள் மட்டும் உலகில் பணம் படைத்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்களுடைய செல்வமானது நாளுக்கு நாள் வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து கொண்டே வருகின்றது. அந்த நிலைமையிலேயே அவர்கள்சதாயிருந்து வரக்கூடுமென மனப்பால்குடித்துக் கொண்டுவருகின்றார்கள். இத்தகைய மக்களே தான் துஷ்டர்களாகவும், சுயநலக்காரர்களாகவும், கொடுமையாளர்களாகவும் காணப்படுவதுடன், ஏழைகளை வஞ்சிக்கின்றவர்களாகவும், அயோக்கியர்களாகவும், பஞ்சமா பாதகங்களுக்கு அஞ்சாதவர்களாகவும் விளங்குகின்றார்கள். அவ்வாறு அவர்களிருந்த போதிலும் கூட, உலகம் அவர்களுக்குத் தான் மதிப்பையும், கௌரதையையும் அளிக்கின்றது. அவர்களும் அத்தகைய மதிப்பிலும், கௌரதையிலும் ஓர் வித பெருமை பாராட்டிக்கொள்வதுடன், மிக்கசந்தோஷமாகயிருந்து வருவதாகவும் உலகிற்காட்டிக்கொள்ளுகின்றார்கள். நம்மைப்போலிருக்கக்கூடிய எண்ணிக்கையற்றமக்கள், தங்களுடைய வாழ்க்கையை இன்பகரமாக நடாத்த வேண்டுமெனப் பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டு வருகின்றார்கள். பல இலட்சக்கணக்கான மக்கள் தாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு பிரதிமாதமும் தவறாமல் வீட்டுச் சொந்தக்காரருக்கு வாடகை கொடுப்பதற்காக வேண்டியும், தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிப்பதற்காக வேண்டியும், அக்குழந்தைகளுக்கு வேண்டிய ஆடைகளையும், இன்னும் இதர பொருள்களையும் அளிப்பதற்காக வேண்டியும், நோயுற்றால் அக்குழந்தைகளுக்கும், தங்களுக்கும் சிகிச்சை செய்து கொள்வதற்காக வேண்டியும், தங்களுடைய வயோதிக திசையில் சிரமமின்றி சுகமாக இருந்து வருவதற்காக வேண்டியும் தங்களுடைய சம்பாதனையில் ஏதாகிலும் மீதி செய்து சேர்த்து வைக்க வேண்டுமென நம்மைப் போல் உண்மையாகவே அரும்பாடு படுகின்றார்கள். ஆனால் அவர்களுடைய அத்தகைய முயற்சி யாவும் விழலுக்கிறைத்த நீரே போல் வீணேயாகின்றன. நம்மைப் பொருத்தவரையிலும், இன்று எனக்கும் என்னுடைய கம்பெனியின் சொந்தக்காரனுக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. என்னுடைய எஜமானன் இன்று எனக்கு நியாயம் வழங்கத் தவறியதுடன், துஷ்டத்தனமாகவும் அயோக்கியத்தனமாகவும் கூட என்னிடம் நடந்து கொண்டான். என்னுடைய மனது இன்று இரவு இத்தகைய விஷயங்களில் பிரவேசிப்பதற்கு அவனுடைய அத்தகைய நடத்தையே ஒரு சமயம் காரணமாக இருந்தாலும் கூட இருக்கலாமென நினைக்கின்றேன். நான் செய்யப்பட்ட தொழிலுக்கும், என்னுடைய சாமர்த்தியத்திற்கும் நான் தற்சமயம்பெற்று வரும் ஊதியமானது (சம்பளம்) அதிகக் குறைவே யாகுமென்பது உனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், நான் என் செய்வேன்? என்றால் என்ன

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

சோஷிலிசம்.

(சமதர்மம்)

கட்டுரை 1.

[சோஷலிஸ்ட்]

சமதர்மம் அல்லது சோஷலிசம் என்ற பிரச்சினையானது வெகு சிக்கலானது. இவ்விஷயத்தைப் பண்டிதரும் பாமரரும் அறியத்தக்க முறையில் தமிழில் வெளியிடுவதென்பது மிகவும் கஷ்டமானது. எனினும் "சோஷலிஸ்ட்" என்ற புனைப்பெயர் பூண்டு அறிஞர் ஒருவர் நமக்கென பிரத்தியேகமாக பல கட்டுரைகள் எழுத முன்வந்துள்ளதை நாம் பாராட்டுவதுடன் நமது வாசகர்கள் அவசியம் வாரம் தவராது வெளிவரும் இக்கட்டுரைகளை கவனித்து உண்மை உணர வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். (ப-ர்.)

உலகமெய்ங்கணும்அமைதியின்மைநிலவுகிறது. மக்கள் இவ்வித அமைதியின்மையின்காரணங்களை போக்க பல வேறு முறைகளை பரிக்ஷித்து பார்க்கிறார்கள். அனேகமாக எல்லா பரீக்ஷார்த்த முறைகளும் சமதர்மத்தை அடிபடையாகக் கொண்டதே. இது சமயம் உலகில் நான்குவித பரிக்ஷார்த்த முறைகள் அனுஷ்டிக்கப் படுகின்றன. அவை ருஷ்யாவில்சோஷலிசம் என்றும் இட்டாலியில் பாசிசம் என்றும், ஜெர்மனியில் நாசிசம் என்றும் அமெரிக்காவில் கஷ்டநிவாரணமென்றும் அழைக்கப்படும். இன்றைய நிலையில் மனித சமூகத்தில் கஷ்டம் தினே தினே மேன்மேலும் வளர்ந்து வருவதை தடுப்பதற்காகவே இந்நான்கு முறைகளும் அந்தந்த நாட்டில் அனுஷ்டிக்கப்படுகின்றன. இந் நான்கு முறைகளும் உலகத்தில் பொருள் சரியான முறையில் பிரிக்கப் பட்டிருக்கவில்லையென்ற ஒரே காரணத்தை அடிப்படையாகக்கொண்டு தான் ஆரம்பிக்கப்பட்டு இந் நிலையை மாற்ற தங்கள் தங்களுக்கு ஏற்ற வழியில் சில திட்டங்களை அனுஷ்டிக்க போதிக்கின்றன.

ருஷ்ய சோஷலிசம்.

இது வெகு சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், உண்மையான சமதர்மத்திற்கு நேரான வழியாகவும், மனித சமூகத்தில் உள்ள கஷ்டங்களையும் வித்தியாசங்களையும் போக்கத்தக்க திட்டமாகவும், அமைந்திருப்பதுடன், நியாயமானதாகவும், சுலபமானதாகவும், அறிவிற்கு பொருத்தமானதாகவும் இருக்கிறது. இனி அடுத்துவரும் கட்டுரைகளில் ருஷ்ய திட்டம் எவ்வகையில் சிறந்ததென விரிவாக எழுதுவோம்.

பாசிசம்.

இத்தாலியில் இன்று அனுஷ்டானத்தில் இருந்துவரும் பாசிசம் என்ற திட்டம், சமதர்மம் நாட்டிலே உண்டாகாது தடுக்க வேண்டி முதலாளிகளால் செய்யப்படும் கடைசி எத்தனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள புதிய பெயர் எனச் சொல்லலாம். இதர நாடுகளில் பொருள் உற்பத்தியிலும், பிரிவினை செய்வதிலும் பல தத்றுதல்கள் இருந்துவந்த போதிலும்; இத்தாலியில் உள்ள பாசிஸ்ட் கக்ஷியானது பொருள் உற்பத்தியையும் பிரிவையையும் ஒருவித ஒழுங்கால் கட்டுப்படுத்திக் கொண்டுபிறநாடுகளில் இன்றைய தினம் நிலவுகின்றதான ஒழுங்கீனங்களை குறைவு படுத்தியிருக்கிறது.

இப்பறகையிலேயே இந்த தேசீயக் கட்டுப்பாடானது பூராதேசத்திற்கும் அனுசரணையாக இருக்கின்றது. இங்கு முதலாளிகள் கொழுத்த விகிதாசாரத்தைப் பெறுகின்றனர், ஆனால் தொழிலாளர்கள் தங்களுடைய உயிருடலோடு ஒட்டிக்கொண்டு இருக்க மாத்திரமே—ஏதோசிறு பயனைப் பெறுகின்றார்கள் இத்தாலியில் முதலாளி வகுப்பானது மிக பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இங்கு தொழிலாள சமூகமானது—முதலாளிகளைக் கொண்டதும், முதலாளிகளால் வாஸ்தவத்திலேயே நியமிக்கப்பட்டவர்களான தொழிலாள பிரதிநிதிகள் எனப்படுவோர்களை கொண்டதுமான, போர்டாரின் ஆஞ்ஞைக்குக் குறிப்பிட்ட சம்பளவிகிதத்திற்கே வேலை செய்ய நிற்பந்திக்கப் பட்டிருக்கிறது. பொருள் உற்பத்தி பிரிவினை முதலிய தேசீய சட்டுப்பாட்டாலும், பிறநாடுகளை அடக்கிஆளும் சூரைத்தனத்தாலும் முதலாளிகளே வாஸ்தவத்தில் பலாபலன்களை அடைக்கிறார்கள். ஆனால் ஒன்று மாத்திரம் வாஸ்தவம். அதாவது பிறமுதலாளி நாடுகளைக் காட்டிலும் இங்கு தொழிலாளர்களுடைய நிலைமையானது சிலாகிக்கத் தக்கதாக இருக்கிறது. பாசிச மானது ஏழை எளியவர்களின் அவசர பசியை மட்டிலும் அவசியத்துக்குப் போக்கி—சகலருக்கு முரிய சம சௌக்கிய பாத்தியதைகளைப் பெறநிரந்தரமான முறைகளைக்கையாடஒத்திப்போட்டு வருவதால், இதுவும் சோஷலிசத்திற்குபெரிய விரோதியாக ஆகிறது.

இதர நாடுகளின்தொழில்முறைகளில், ஒழுங்கற்றதவறுதல்கள் நிலவும் வரை பாசிசமானது ஜீவித்திருக்க முடியும். இதர நாடுகள் தங்களுடைய தொழில்களை ஒழுங்கு படுத்திக் கொண்டால், இதாலிஇருக்கிற இடமேதெரியாமற்போய்விடும். இத்தாலியானது பிறநாடுகளின் உழைப்பின் பயனைக்கொண்டுகும்மாளமடிக்கிறது. பிற தேசங்கள் விழிப்புற்றால் இத்தாலிக் கொஞ்சமும் வாழ முடியாது; ஏனெனில் இத்தாலியானது தனது தேசத்தைப் பற்றியே தான் நிற்கிறதே தவிர காட்டின் க்ஷேமத்திற்காக நில சம்பந்தப்பட்ட எந்த பேலை முறைகளையும் கைக்கொண்டுவிடவில்லை. நாட்டின் க்ஷேமம் நாசமாக்கப்படுமானால், தொழிலாளர்கள் சமூகமானது நிச்சயமாக முதலாளிகளுடைய செல்வங்களையும், போக போக்கியங்களையும் வலுவில் கைப்பற்றி சோஷியலிசத்தை சுலபசாத்தியத்தில் நிறுவிவிடும்.

பிறது நாடுகளின் மீதுஆதிக்கம் செலுத்தவும், அவர்களை கொள்ளையிடவும், இதனால் முதலாளிகளுடைய குவிந்து கிடக்கும் செல்வத்தை அதிகரிக்கவும்—பாசிசமானது பூர்ண தேசீயத்தை வளர்த்து உரம்பெறச்செய்கிறது.

இந்த முறையானது முதலாளிகளுடைய நன்மையின் காரணத்தால் நிச்சயம்யுத்தத்தைக்கொண்டுவந்துவிடும். தொழிலாளிகளை இனி யுத்தங்களுக்கு இழுத்துவிடமுடியாது. யத்தமானது உலகம் பூராவிலுள்ள தொழிலாளர்களின் நன்மைக்கு பாதகமானதென்று தொழிலாளர்களில் சிலர் உணர்ந்திருக்கிறார்கள் இதைப் பிறர்களுக்கும்போதிக்கவேண்டும் இனியுத்தமேற்பட்டால், தொழிலாளர்கள் விலகி நின்று, சந்தர்ப்ப நிலையை அனுகூலப்படுத்தி அதிகாரங்களைக் கைப்பற்றி சோஷலிசத்தை நிறுவ வேண்டும். இதனால்பாசிசமானது, சோஷியலிசத்தைநிலை நிருத்துவதில் ஒத்திப்போடுவதின் மூலம் தற்காலிகருநாகஇருந்துவருகிறது. ஆகவே இது சோஷியலிசத்துக்கும் ஒரு பெரும்எதிரியாகும். ஒருபாசிஸ்ட் தேசமானது மற்றொரு தேசத்தோடு இயற்கையாகவே முட்டி மோதி போரிட்டுகொள்ளவேண்டியதாகிறது. முடிவாக எல்லா பாசிஸ்ட் தேசங்களும் ஒன்றோடொன்று போரிட்டுக்கொண்டு சோஷலிசத்தை தழுவரேும்.

நாசிசம்.

நாசிசத்தை பாசிசத்தின் "முட்டாள் சகோதரி" என்றுகூறலாம் நாசிசத்திலுள்ள எல்லா குறைபாடுகளும் இதில் நிறைந்திருக்கின்றன. அதோடுபரிசுத்தவர்ணபேதம்போன்ற முட்டாள்கொள்கைகளும் மலிந்து கிடக்கின்றன. நாஸியர்கள் இப்பொழுதுதான் ஆதிக்கத்துக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் எந்த தீவிர காரியமும் செய்யஇயலாதபல மற்றவர்களாக இருக்கின்றார். அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதும் அவர்கள் எந்த முட்டாள் தனத்தில் முட்டிக்கொள்ளப் போகிறார்களென்பதும் நாம் பொருத்திருந்துபார்க்க வேண்டியவிஷயமாகும். துன்பங்களையும் துயரங்களையும் எல்லாம் நாசிதத்தால் களைந்துவிடலாமென்று யோக்யமாக நினைக்கும்நாஸியர்கள்சிலர் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த நம்பிக்கையில் அநேக தொழிலாளர்களும் மூங்கி மூழ்கி இருக்கின்றார்கள். வேலை இல்லாத ஆண்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க பெண்களை வீட்டின் நான்கு அடைப்புகளுக்குள்ளும் (நல்லமுஸ்லீம்களைப்போல்) காவல் படுத்தி யிருப்பதைத்தவிர, நாசிசமானது இதுவரைஎந்த குறிப்பிடத்தகுந்த காரியத்தையும்சாதித்துவிடவில்லை. இது போன்ற 'தான் நாஸியர் களுடைய தவறுதல்களை; ரஷ்யாவிலுள்ள சோஷியலிஸ்டுகளைபற்றி பிரஸ்தாபிக்கப்படும்போது அதன் தார தம்மியங்களோடு பரிசிலனை செய்யபடும். இனி அடுத்துவரும்கட்டுரைகளில். பாசி

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

மனிதனின் பெருமையும் வறுமையும்.

[கோவை தோழர் கே. அப்துல் ஜப்பார்]

இப் பிரபஞ்சத்தின் கண் வசியும், எறும்பு முதல் யானை ஈறாகவுள்ள சகல ஜீவராசிக் கோடிகளைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவன். காரணம் மனிதனுக்கு பகுத்தறிவு, சுயாதீன சித்தம் அறிவுப் பெருக்கம் அமைந்திருப்பதேயாகும். மனிதனின் பூர்வீக புராதன வாழ்க்கையையும், தற்போதைய நவீன வாழ்க்கையையும் சற்று சிந்தித்து, சரித்திர அத்தாட்சியால் அறிந்தால் மனிதனிடத்துள்ள அரியதோர் சக்தியின், வல்லமையின், அறிவின் இரகசியத்தை அறியலாம். முதன் முதல் மனிதன் நிர்வாணமாக, ஆடையின்றி காடுகளில் திரிந்தான். இலைகளையும், பட்டைகளையும் தனக்கு ஆடையாக உபயோகித்தான். பின்னர் நூலைக்கொண்டு ஆடைகளை நெய்தான் இருப்பிடத்தைப் பொறுத்த மட்டில், மனிதன் முதலில் குகையிலும் மரங்களின் மீதும் வசித்தான். மாஞ்செடிகளாலும், தென்னை ஓலைகளாலும் வேயப் பெற்ற வீடுகளில் வசித்தான். பின்னர், கற்களால் கட்டிய சாதாரண வீடுகளில் வசித்தான். பின்பு நாகரீக முறையில் கூடிய சீக்கிரத்தில் இருப்பு சட்டங்களைக் கொண்டு வானளாவும் கட்டடங்கள் கட்டப்பட்டன —கட்டப்படுகின்றன. 612 அடி உயரமுள்ள சிங்கர் கட்டிடமே இதற்கு சிறந்ததோர் உதாரணமாகும்.

சந்தனக்குடம் முதலிய விஷமத்தனங்களின் கதியும் இப்படியே. இச் சாமிகளுக்கு முன்னால் வாண வேடிக்கைகளென்ன! தேவதாசிகளென்ன! கரடி, புலி, கழுதை முதலிய மிருகங்களைப் போன்று பகுத்தறிவுள்ள மனிதன் செல்லும் காக்ஷி என்ன! இதனால் நாட்டுக்குண்டான பலன் என்ன? வறுமை என்ற கூச்சல் தான். ஆனால் ஒரு சாரார் மடாதிபதிகள் முல்லாக்கள் என்போர் கொழுத்து திமிர் பிடித்து மோக்ஷலோக கர்த்தாக்களாய் விளங்குகின்றனர்.

சமதர்ம யௌவன சிங்கங்களே! இப்போர்க்கொத்த சமூக ஊழல்களை சாகடித்து, சமதர்மத்தைப் பரவச் செய்யவேண்டும். உலக முன்னேற்றத்துக்கு,மனித சமூக அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக, விரோதமாக எது வந்த போதிலும் அது ஜாதி யென்றாலும் சரியே, மதம் என்றாலும் சரியே, சமூகம் என்றாலும் கோவில் என்றாலும் சரியே, அவற்றை சமதர்மக் கோடலியால் சுக்கல் சுக்கலாக பொடிப் பொடியாக, தூள் தூளாக உடைத்தெரியுங்கள். அப்படியின்றி மனிதனுக்கு சாதகமாக, பயனாக துன்பத்தைப் போக்கி இன்பத்தை அளிக்கக் கூடிய எது வந்தபோதிலும் அதை சீரும் சிறப்புமாக வரவேற்றுங்கள். அது தான் சமதர்மம். அது தான் சர்வ லோக சகோதரத்வம்.

எனவே, கானக வாசிகளாகிய சிங்கம், புலி, கரடி முதலிய துஷ்ட ஜந்துக்களை அடக்கி யாளக்கூடிய, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய ஐவகை பூதங்களையும் அடக்கி அரசு புரிகின்ற அரிய சக்தியை, அரிய பெருமையை பிரத்தியட்சமாக சர்வ சாதாரணமாக மனிதனிடம் இன்று நாம் காணலாம்.

இப்பிரபஞ்சம் மனிதனுக்கடிமை. இப்பரந்த பூபதி மனிதனே கிராமபோன் போன்ற இன்னிசைக் கருவிகளென்ன! ஓடும்ரயில், மோட்டார், டிராம் போன்ற இயந்திர வாகனங்களென்ன! டெலிபோன், தந்தியிலாக் கம்பி முதலியவைகளென்ன! கடல் கடந்து செல்லும் கப்பல்களென்ன! ஆகாய மண்டலத்தில் சஞ்சரிக்கும் ஆகாய விமானங்களென்ன! மின்னி மறையும் மின்சாரங்களென்ன! ஒலி பரப்பும் கருவிகளென்ன! இப்போர்க் கொத்த, இத்தகைய, அபூர்வ, ஆச்சரிய செய்கைகளுக்குக் காரண கர்த்தா மனிதனே என்பது வெள்ளிடைமலை. இம் மட்டோ! இறப்பு, நிகழ், எதிர் ஆகிய திரி காலங்களையும் உணரக்கூடிய தீர்க்க தரிசியும் மனிதனே. இந்நிலவுலகத்தின் சகல வஸ்துக்களும் மனிதனுக்கே உரியதாகும். நீல நிற வானத்திலே மேக மண்டபங்களை உண்டாக்கி மழை பொழியச் செய்யும் சக்தி பொருந்தியவன் மனிதனே! உலகத்திலுள்ள சர்வமும் மனிதனுக்கு அடங்கியிருக்க, அவற்றை மனிதன் தன் இஷ்டப்படி தனது அறிவுக்கேற்ப கையாடுதல் விந்தையோ! இத்தகைய பெருமை வாய்ந்த, இவ்வாறு மேன்மை பொருந்திய, அபார அறிவு பொக்கிஷம் வாய்ந்த, அரும் பெருஞ் செயல்களைத் தன்னுள்ளே அடக்கியுள்ள மனிதனே, புலால் பொதியுடல் லென்றும், மனிதன் வீண் படைப்பபென்றும், துன்பக் கூடு என்றும், நமன் இரை எனவும் கூறி இகழ்ந்துரைப்பின் அக்கூற்று இபற்கை லக்ஷியத்திற்கு சற்றும் பொருந்தாது.

மனிதனின் வறுமை.

மனிதனின் வறுமை அவனது அறிவை கையாளும், நடாத்தும் முறையைக் கொண்டு வர்ணிக்கப்படுகிறது, இன்று மனிதன் எந்நிலையில், எத்தகைய அந்தஸ்தில் இருக்கின்றான்? எவ்வாறு தன் வாழ் நாட்களைக் கழிக்கின்றான்? இவ்விதம் மனிதன் என்ன முறையில் நடத்தப்படுகிறான்? சிறப்பாக நமது நாடு இந்தியாவை எடுத்துக் கொள்ளுவோம். இந்தியாவுக்கு இரு அழகான பெயரெச்சங்கள் சூட்டப்பட்டு அநேகக் கட்டுரைகள் வெளி வந்ததை கண்டவர்களுக்கு, படித்தவர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவை அடிமை (இந்தியா) தரித்திர (இந்தியா) என்பதாகும். இந்தியாவின் அடிமைத் தனத்தை நான் அதிகமாக விவரித்துக் கூறாது 'அடிமை' என்ற வார்த்தையுடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். இந்தியாவின் தரித்திரத்தை, வறுமையை சற்று கவனிப்போம்.

இந்நாட்டின் 35கோடி மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டு பேர் தொழில் செய்து பிழைக்கும் தொழிலாளிகள். நெற்றிவேர்வை நிலத்தில் வீழ, கடும் வெயிலில் பாடுபடும் பாட்டாளிகள். இவர்களின் தேகம் என்ன ஊற்றுக் கிணறோ என ஐயுறத்தக்கதாக, வேர்வை நீரால் மூழ்கினவர்களாகி—சாமான்களை, பலசரக்கு மூட்டைகளை வண்டியிலேற்றி இழுத்துச்செல்லும் கூலியாட்கள் அனலின் காங்கையால் சரீரம், கழுத்து, மெலிவுற்று, பலகீனத்தால் பிணிக்காளாகும் இயந்திரத் தொழிலாளிகள்; அல்லும் பகலும் படித்துப் படித்து பரதவிக்கும் வேலையிலா கூட்டத்தார், எண்சாண் உயரத்துள்ள மனிதன் தனது ஒரு சாண் வயிற்றுக்காக இத்தகைய பாடுகளைப் படுகிறான். ஆனால் பட்ட பாடுக்கு, கஷ்டப்பட்ட கஷ்டத்திற்கு, உடல் மெலிவுற்ற மெலிவிற்கு ஈடாக பலனாக கிடைப்பது அவர்களுடைய ஒரு சாண் வயிற்றுக்கு ஒரு நேரத்திற்கே போதியதாக இல்லை. அநேகர் பிச்சையெடுத்து வயிறு வளர்க்கும் நிலைமையில் வந்து விடுகின்றனர். அவர்களுக்கு குடிக்க கஞ்சியில்லை. இருக்க வீடில்லை, அருந்த நீரில்லை. அநேக மக்கள் மர நிழலிலும்,சாக்கடையோரத்திலும் படுத்துறங்குகின்றனர். இழிந்த வாழ்க்கையால் கிழிந்த கந்தையைக் கட்டிக்கொண்டு, எச்சில் சோற்றுக்காகப் பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து வருவோர் பலர்.

அநேக மக்கள் "திரை கடலோடியுந் திரவியந்தேடு" என்பதற்கிணங்க, அயல் நாடுகளுக்குச் சென்று கஷ்டப்படுகின்றனர். அவர்களில் சிலோன், சிங்கப்பூர், ஜாவா முதலிய இடங்களுக்குச் சென்று பாடுபடும் நமது இந்திய சோதரரின் நிலை மிக பரிதாபமானதே. விடியற் காலையில் 4மணிக்கு எழுந்து சென்றால் சுமார் 9 மணிக்குப் பின் திரும்பிவர வேண்டும். திரும்பி வந்த பிறகு தான் சமையல் செய்து சாப்பிட வேண்டும். பின்னர் உடனே வேலைக்குச் சென்றால் திரும்பி வர மாலை 6 மணியாகும். அவர்களே அத்தோட்டங்களில பனியால் வருந்தியும் மழையால் நனைந்தும், அட்டையால் கடிக்கப்படும், மலேரியாவால் பீடிக்கப்பட்டும் அல்லுற வேண்டும். ஓய்வு என்பது கனவிலுங்கருத முடியாது. ஒருவனுக்கு மலேரியாவோ, அல்லது மற்ற வியாதியோ வந்துவிட்டால், அது அவனை விட்டு நீங்குவதில்லை. சிகிச்சை செய்து கொள்ளுவதற்காக ஓய்வு நேரம் இல்லை. வியாதியுடன் பாடுபட வேண்டும். கூலியானது 3 அல்லது 4 நாளைக்கு ஒருதரம் கொடுக்கப்படுகிறது. அதுவும் ஆறணா ஏழணாதான். அதிகம் ரூபாய்க் கணக்கிலில்லை. இதிலும் ஒரு பாகத்தை கங்காணிகள் என்ற புல்லுருவிகள் பொய் கணக்குகளை எழுதி வாயில் போட்டுக் கொள்ளுகின்றனா.

இங்ஙனம் துன்பமே அறியா இன்பமாகக்கொண்டு வசித்து வரும் இந்திய சோதராகளிற் சிலர் தமது தாய் நாட்டைக் காண பல முயற்சிகளைச் செய்து இறுதியாக இந்தியாவுக்கு வருகின்றனர். இத் தோழர்கள் நாகப்பட்டணம், பம்பாய் முதலிய இடங்

தொடர்ச்சி 13ம் பக்கம்பார்க்க.

புரட்சி

ஈரோடு 1934- மே மீ 13-௳

சுயராஜ்யக்கட்சி.

அடுத்ததேர்தலை மனதில்வைத்துக்கொண்டு மீண்டும் காங்கிரஸ்காரர்கள் தங்கள் தேர்தல் முழக்கத்தை ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் தேர்தல் முழக்கம் அளவு கடந்தது என்று சொல்லத்தக்க நிலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அத்துடன் மட்டுமல்ல. இவர்கள் இந் நாட்டு மக்களை என்றென்றும் தங்கள் காலின்கீழ் மிதித்தே வாழ்வதற்கு எதைச் செய்யவேண்டுமோ அதையும் செய்து வருகிறார்கள். இம்முறையானது இவர்கள் ஏழை மக்களை இதுவரை ஏமாற்றியதைவிட கொடுமையானது.

சீர்திருத்தத்தில்வரும்பங்கு, விகிதங்கள் இந் நாட்டில் இதுவரையில் இல்லாத முறையிலெல்லாம் ஏரவிருக்கிறது. இதை மக்கள் சாதாரணமாக்க் கவனித்தால் தங்களின் தந்திர முறைகளை உணர்ந்து தங்களைத் தட்டிப் பேசித் தாக்க ஆரம்பிப்பார்கள். இப்படி மக்கள் விழிக்காதிருக்க என்னசெய்வதென்று யோசித்து அத் துறையில் இறங்கிவிட்டார்கள். சீர்திருத்தத்தில் தங்களுக்கு வெறுப்பிருப்பது போலவும் வெறுப்புடைய இந்த சீர்திருத்தத்தால் மகத்தான பிளவு இந் நாட்டில் உண்டாகுமென்று தாங்கள் நம்புவதாகவும் இத்தகைய பயனற்றதையும், பிளவு உடையதையும், வெள்ளைக்காரர்கள் தங்கள் மீதும் தங்கள் நாட்டுமீதும் பலவந்தமாக திணிப்பதாகவும், இந்திய தேசபக்தர்கள் இவைகளுக்கு இம்மிகூட சம்பந்தமில்லாது இருந்ததால்தான் இன்று வெள்ளை அறிக்கையை காந்தியும் காங்கிரசும் எதிர்ப்பதாகவும்பாமரமக்கள் எண்ணும்படிசெய்ய வேண்டுமென்பதே இவர்கள் அவாவாகும். இப்படி மக்கள் மனதை வேறு வழியில் திருப்பிவிட்டால்இவர்கள் மாமூல் காரில் மகிழ்ச்சியுடன் சுற்றி வாழலாம் என்பதும் இவர்கள் எண்ணம். இப்படி இவர்கள் சொல்லிவருவதில் உண்மை கொஞ்சமாவது இருக்கிறதா? என்பதை சிந்திக்கக்கோருகிறோம்.

அறிக்கைப் பிரயோஜனமற்றது,எங்களுக்குப் பிடிக்காதது அத்துடன் வகுப்புவாதமும் நிறைந்திருக்கிறது, என்பதுவே இவர்களின் முதல் பல்லவியாகும். இந் நாட்டின் சகல மக்களுக்கும் நன்மையுண்டாகக் கூடியமாதிரியில் ஓர் திட்டத்தைத்தயார் செய்யஒருகூட்டம் இனி கூட்டப் போகிறோம் என்பது அனுபல்லவியாகும். இவைகள் உண்மையா?

இந்நாட்டில் 1926ம் வருடத்திலிருந்து 1931ம் வருடம் வரையில் கூடிய, அகில இந்திய சம்மேளனங்களெத்தனை, அகில இந்திய காங்கிரஸ் களெத்தனை. அகில இந்திய சர்வ கட்சி மகாநாடுகளெத்தனை, அகில இந்திய சமஷ்டியல் மகாநாடுகளெத்தனை, இன்னும் ஞாபகம் கூட இல்லாத எத்தனையோ "பெயரினால்" அகிலஇந்தியகூட்டங்களை இக் கூட்டத்தார் கூட்டியதையும், நேரு திட்டம் போன்ற வஞ்சனை நிறைந்த பல அரசியல்திட்டங்கள் தயார் செய்ததையும்இவைகள் அத்தனையும் எறிந்து தணலானதையும் பொது மக்கள் மறந்தா? விட்டார்கள்! ஐந்து வருடங்களில் சுமார் 20க்கு உள்பட்ட அகில இந்திய மகாநாடும், 10க்குள்பட்ட அகில இந்திய அரசியல் திட்டங்களும் தயார் செய்யப்பட்டு ஒன்றிலாவது ஒற்றுமையையோ, ஐக்கியத்தையோ, காண முடியாது தானே? லண்டனுக்குச் சென்றார்களென்பதையும், பொது மக்கள் மறந்து விட்டார்கள் என்று இவர்கள் நம்புகிறார்களா?

லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் 15-தினங்கள் முதலில் திட்டம் ஒன்று பட்டு தயாரிப்பதில் வீணாக்கப்பட்டதா? இல்லையா? என்று வினவுகிறோம் 1931-ம் வருடம் 18ந்தேதியன்று பிரதம மந்திரி அவர்களால் இந்திய பிரதிநிதிகள் ஒன்றுபட்ட மனத்துடன் வருமாறும், ஒரு திட்டம் தயார் செய்யுமாறும் கேட்டுக் கொண்டாரு? இல்லையா? இது நடந்த பதினைந்து தினம் கழித்து ஒவ்வொரு பிரிவிலும் இருவர் வீதம், சிறு பான்மையோர் கமிட்டி நியமிக்கப்பட்டு அது ஒரு வாரம் இராப்பகலாக சிந்திக்க வில்லையா? இக்கூட்டத்துக்கு கூட நமது காந்தி தலைமை தாங்க வில்லையா! இவ்வளவு முயற்சிகளுக்குப் பின் மீண்டுமொருமுறை முதன்மந்திரியார் இந்திய பிரதிநிதிகளை சமரச முடிவுக்கு வருமாறு வேண்டிக் கொள்ள வில்லையா! என்றும் கேட்கிறோம் இத்தனைக்கும் பின்பு, காந்தி முஸ்லீம்களையும் கிறிஸ்தவர்களையும் சேர்த்துக் கொண்டு ஆதிதிராவிடர்களை சதி செய்ய முயலவில்லையா என்று கேட்கிறோம். இப்பிரமாண்ட முயற்சிகளுக்குப் பின் அதாவது, இந்திய நாட்டு பிரதிநிதிகள் தங்களுக்குள்

1. இன்னின்னஅதிகாரங்களும், உரிமைகளும் எங்களுக்கு இருக்க வேண்டும்.

2. அதை இங்குள்ள பிரிவினர்களான நாங்கள் இன்ன விகிதப்படி அனுபவித்துக்கொள்ளுகிறோம் என்பது போன்ற ஓர் திட்டத்தை தயார் செய்ய முடியாமல் போக வில்லையா என்று கேட்கிறோம. இதன் பின்பு தானே! பிரிட்டிஷ் கனம் முதன் மந்திரிகீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்.

அறிக்கை.

1 இந்தியாவுக்கு மாகாண முழுதும் சுய ஆட்சியும் மத்திய அரசாங்கத்தில் பொறுப்புள்ள ஆட்சியுமே கொடுக்கப்படும்.

2. இராணுவ இலாக்காவும், வெளிநாட்டுச் சம்பந்த இலாக்காவும், கவர்னர்ஜெனரல்பொறுப்பில்தான் இருக்கும்.

3. சில நிபந்தனைகளும், சில நீதி சம்பந்தமான பொறுப்பை மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்படும்.

4. இந்தியாவின் செல்வ நிலைக்குத் தீங்கு வராத நிலையில் பாதுகாக்கும் பொருப்பு கவர்னர்ஜெனரல் இடமே இருக்கும்.

5. குறைந்த வகுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும் கவர்னர்ஜெனரல் இடமே இருக்கும்.

6. தேசத்தின் அமைதியைப் பாதுகாக்கும் பொருப்பும் அவருடையதே.

7 உங்களால் இதுவரையில் சிறுபான்மை வகுப்புப் பிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை.

8. இனியாவது நீங்கள் முயன்று ஓர் முடிவுக்கு வாருங்கள்-

9. இல்லாவிட்டால் நானே முடிவுசெய்து விடுகிறேன்-

10 இந்தியாவிலுள்ள எல்லா வகுப்புகளுக்குள்ளும் சமரசம் ஏற்படாததே பொருப்பாட்சி ஏற்படுத்தத் தடையாக இருக்கிறது. இவைகளை ஒரு முறை ஞாபகப்படுத்திப் பாருங்கள். அன்று பிரிட்டிஷ் முதல் மந்திரியார் தான் தரப் போவதாகச் சொன்ன அதிகார உரிமை எல்லையைவிட இன்று ஏதாவது குறைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா, அல்லது அன்று மந்திரியார் சொன்ன அதிகார அளவு இருக்கிறதே அதைப் போதா தென்றும் அதிக மதிகாரம் இருக்க வேண்டு மென்றும் கேட்டவர்கள் யாராவது இன்று இருக்கிறார்களா? அதிகார அளவில், உரிமை அளவில் அன்று முதன் மந்திரி சொன்னதற்கு ஒத்துத்தாளம் போட்டவர்கள்தானே அத்தனை வ. மே. ம. நா. பிரதிநிதிகளும். இதில் காந்தி, மாளவியா, சரோஜனி, சாப்ரூ இவர்கள் மாட்டேன் என்றவர்களா? அன்று பார்ப்பவர்களுக்குப்பிரிட்டிஷ் மந்திரியார் கூறிய அதிகார எல்லை இருக்கிறதே, உரிமை அளவு இருக்கிறதே இதில் எதிர்த்துப் பேசியவர்கள் எவருவதுண்டா? எதிர்த்துத் தாங்கள் கூறுவதை மந்திரியும் மற்றவர்களும் ஒப்புக் கொள்ளச் செய்தவர்கள் தான் யாரேனும் உண்டா. இவைகளை சிறிது சிந்திததாலே சீர்திருத்த அறிக்கையை எதிர்க்கும் காங்கிரஸ்காரர்களின் யோக்கியதை நன்கு தெரியும்.

இவ்விதம் உரிமை பெருகுவதில்இதை விட அதிகம் ஒன்றுமில்லை என்று காந்தி உள்பட சகலரும் தலையை ஆட்டி விட்டு இங்கு வந்து திடுக்கிட்டேன் என்றால்இதுநாணயமானதா? இதுதான் போகட்டும் மேலே சொன்ன அளவுக்கு கொடுக்கப்போகும் உரிமைகளை பங்கு போடுவது அதாவது இன்னின்ன சமூகத்தாருக்கு இவ்வளவு தான் என்று முடிவு செய்வது இருக்கிறதே! அதிலாகிலும் நாணய முண்டா!

இன்று கண்டிப்பதைப் பாருங்கள். பஞ்சாப்பிலும் வங்காளத்திலும், எல்லைப்புறத்

லும் முஸ்லீம்களுக்கு அதிக உரிமை கூடாது என்று சொன்னார்கள். இன்றும், சகல இந்து வடநாட்டு பார்ப்பனர்களும் இதைத்தான் சொல்லுகிறார்கள்.

அடுத்தாற்போல் வகுப்பு உரிமை வழங்கப்பட்டது இருக்கிறதே! அதுகூடாது என்றார்கள்.

இப்பங்கு விகிதமானது வற்புறுத்திக் கொடுக்கப்பட்டதா? என்பதே இன்றைய முக்கிய கேள்வியாகும். வற்புறுத்தியல்ல. நமது காந்தி, மாளவியா—சரோஜனி உள்பட அத்தனை பிரதிநிதிகளும், எங்கள் நாட்டில், நாங்கள் யார் யார் எவ்வளவு உரிமையை அனுபவிக்கவேண்டும் என்பதைப்பற்றி முடிவுசெய்துகொள்ளமுடியவில்லை. ஹே முதன் மந்திரியே! நீங்களே கூறும் முடிவுக்கு நாங்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டு ஒத்துப் போகிறோம் என்று சொன்னதுடன் அவ்விதம் எழுதி கையொப்பமிட்டுக்கொடுத்து விட்டு வந்த பின்புதானே? முதன் மந்திரியார் பங்கு விகிதாச்சாரத்தை வெளியிட்டார் என்று கேட்கிறோம்.

இவர்கள் ஒப்புக்கொள்வதுடன் மட்டுமல்ல உறுதி கூறுவதாகவும் கூட எழுதியிருக்கிறார்களா? இல்லையா என்றும் கேட்கிறோம். சீக்கியர், ஹிந்து, முஸ்லீம் பிரச்சினையைத் தீர்க்கும்படி கொடுத்த கடிதத்தில் காந்தி, கையெழுத்து போடவில்லை ஆனால், மாளவியா, சரோஜினி, ரங்கசாமிஐயங்கார் பிர்லா, இவர்களும் தர்பங்கா மகாராஜா நரேந்திரநாத், மூஞ்சே, ஜெயக்கர், இவர்களும் ஸர். ஸாப்ரூ, சாஸ்திரி, செத்தல் வாட், பாத்ரோ, சேத்னு, இவர்களும் கையொப்பமிட்டார்களா, இல்லையா என்று கேட்கிறோம். இவைகளை நேரில் காந்தி பார்த்தாரா இல்லையா என்றும் கேட்கிறோம்? மேலேகண்ட கையொப்ப நகல்களின் கருத்துப்படி ஓர் கடிதம் தனியாகக் காந்தியால் முதன்மந்திரிக்கு கொடுக்கப் பட்டதா இல்லையா என்று வினவுகிறோம்? அத்துடன் முதன்மந்திரிக்கு காந்தி எழுதிய கடிதத்தில் தான் மாளவியாஜி எழுதிய கடிதத்தில் கையெழுத்து இடாததால், பிரதம மந்திரியின் தீர்ப்பை காங்கிரஸ் எதிர்க்கு மென்பது அர்த்தமல்ல என்றும் குறிப்பிடவில்லையா? இவ்விதம் அங்கு நடந்து கொண்டவர்கள் கையெழுத்திட்டவர்கள், இங்கு மீண்டும் ஒவ்வொருவராகக் கிளம்பி கண்டிக்கிறோம் என்பது நாணயமானதாக இருக்க முடியுமா? இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் நேற்று ராஞ்சியில் கூடிய கூட்டத்தில் வகுப்புப் பிரிவினை சம்பந்தமான பிரச்சினையைப்பற்றியொன்றும் சொல்லாமல் ஒதுக்கி வைத்துவிட்டு அரசியலறிக்கையை மட்டும் கண்டிக்கிறோம், என்றார்களே! அதிலும் ஓர் முஸ்லீம் தலைமையில். இதற்கு முன்பு வட்டமேஜை மகாநாட்டிலும் இவ்விதமோர் தீர்மானம் கொண்டு வந்தபோது இது ஏமாற்றும்தீர்மானம். பங்கு விகிதத்தைக் கூறி பின்பு எவ்வளவு வேண்டுமென்பதை முடிவு செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்படவில்லையா ஆனால் ராஞ்சியிலோ அத்தகைய பிரதிநிதிகள் பிர்லாமாளிகையில் ஹிந்து மகாசபையார் கூட்டத்தில் தலைவரென்று பேரெடுக்க ஆசை உள்ள ஓர் முஸ்லீம் தலைமையில் நடந்த ஏமாற்றும் நாடகம்தானே இது?

வட்டமேஜை மகாநாட்டுக்கு சென்ற ஓர் முஸ்லீம் கனவான் காந்தி மந்திரிக்கு எழுதிய கடிதத்தில், இன்ன நிபந்தனை மீது தான் காங்கிரஸ் வகுப்புத்தீர்ப்பை ஒப்புக்கொள்ளுமென்று குறிப்பிடவில்லையே என்று கேட்கிறாரே இதற்குத் தான் தேசிய வாதிகள் என்ன சொல்லப்போகிறார்கள்-

நாளை பாட்னாவில்கூடவிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் வெள்ளை அறிக்கைக் கண்டன புரட்டு நடக்கும். அத்துடன் அன்சாரியின் அபேதவாதத்திட்டமும் தோழர் மசானியின் அபேதவாதத் திட்டமும் ஆலோசனைக்கு வருறது. இக்கூட்டத்திலும். இன்னும் எந்தமாதிரியான நாடகத்தை நடத்துகிறார்களென்று பார்ப்போம். நமது தலைவர் சிறையினின்று விடுபட்டு வந்து விடுவார்

தமிழ் நாட்டு ஐயர்களும் ஐயங்கார்களும் அசம்பளி தேர்தலுக்கு ஆர்பாட்டம் செய்யும் இன்று நமது தலைவர் வெளிவருவது மகிழ்ச்சியூட்டக் கூடியதாகு மென்று நம்புகிறோம்

தலைவர் தோழர் ஈ. இராமசாமியே! க. நின்வரவு நல்வரவாகுக! தமிழ் நாட்டுக்கு தேவையாகுக! என்று கூறி வரவேற்கிறோம்.

தோழர் வி. வெரிவாடய்யாவா மறைந்தார்.

9-ந்தேதி யன்று கோவையில் தோழர் வெரிவாடா செட்டியார் அவர்கள் மரணமடைந்தார். மாகாண பிராமணரல்லாத தலைவர் மறைந்தார். கோவையின் அழகை பிரதி பலிக்கச்செய்து, கோவையின் பெருமையை, எங்கும் நிலைநாட்டிய பிராமணரல்லாதார் பெரியார் இறந்தார்.

தோழர் வெரிவாடய்யா அவர்கள் மரணமானது என்றும் மறக்க முடியாததாகும். எவரும் தம்மை பற்றி எண்ணி கொண்டிருக்குமாறு இன்னாட்டில் பொது சேவை செய்தோர் சிலரேயாவார். ரின் மரணத்தினால் பெரும் நஷ்டமடைந்த கோவை தோழர்களுக்கு அநுதாபம் எவ்விதம் கூறுவதெனத் தெரியவில்லை என்றும் ஈடுசெய்ய முடியாத பெரும் நஷ்டம் நமக்குண்டாகி விட்டது' இதை ஈடுசெய்ய அவர் குடும்பத்தில் பலர்முன்வருதல்வேண்டுமென்றும் நமது அநுதாபத்தையும் ஆறுதலையும், அன்னார் குடும்பத்துக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

முஸ்லீமும், பிராமணரும் ஒன்றா?

வீரசிங்கம்பேட்டைக் கலவர வழக்கை விசாரிக்கஆரம்பித்துவிட்டார்கள். அதற்காக ஸ்பெஷல் மாஜிஸ்ட்டிரேட்டும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஒருவாரமாக விசாரணை நடந்துவருகிறது.

இவ் வழக்கு நடந்து [illegible] யில் அப்பிர தேச [illegible] சரிப்படுத்தத் தண் [illegible] நியமித்து சாரைச் சர்க்கார் [illegible] தண்டப் பே [illegible] கிறார்கள். இ [illegible] னத்தை இக்கிரா லீசின் செ [illegible] ஒப்புக்கொள்ளவே மவாசிக [illegible] று சர்க்கார்அறிக்கை ண்டு [illegible] றது இதைப்பற்றி நா [illegible] மதும் கூற விரும்பவில்லை. ஆனால் இத் தண்டப் போலீ [illegible] ருக்கு ஆகும் செலவினம் [illegible] இருக்கிறதே அதைப் பற்றி விபரம் கூறும்போது மேற்படி கிராமவாசிகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு மேற்படிகிராமத்திலுள்ள 'பிராமணர்கள் முஸ்லீம்கள்' இவர்கள் நீங்கலாக என்று கூறியிருப்பதுதான் நமக்குப் பெரும் சந்தேகத்தை உண்டாக்குகிறது.

இன்றைக் கெல்லாம் மாதம் 450 ரூபாய்க்குள்தான் டிவிஷனல் மாஜிஸ்ட்டிரேட் தெண்டச் சிலவு மாதா மாதம் விதிக்கக்கூடும் 300 வீடுகள் அங்கே இருக்கிறதென்று வைத்துக்கொண்டால், வீட்டுக்கு மாதம் ஒன்றரை ரூபாய் [illegible] கூடும் ஒரு வருடத் [illegible] பதினெட்டு அல்லது [illegible] ரூபாய்க்கு அதிகம் [illegible] கில்லை. இது ஓர் [illegible] சிலவென்றுகூட [illegible] வில் [illegible] தன் [illegible] ஓர்வ [illegible] பார்ப்பனர் [illegible] தா? என்று சி [illegible] கக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

எந்தவிதம் எண்ணி [illegible] லது கருதி இவ்விதி வி [illegible] சர்க்காரால் புகுத்தப் ப [illegible] என்பதை அறிய நாம் [illegible] ருவதைப்போலவே, ந [illegible] து வாச [illegible] கர்களும் ஆசைப்பட [illegible] கூடும்.

சர்க்கார் உத்திரவில் 'கருதுவதால்' என்ற பதம் முஸ்லீம்களைப்பற்றி சொல்வது [illegible] கியாயம். அவர்கள் மாரிய [illegible] ம்மன் என்பதை ஓர் தெய்வமாக [illegible] ர்கள் கருதுவதில்லை. இத [illegible] வழக்கு சகாப்தத்துக் [illegible] மு [illegible] ர்களுக்கும் எந்த [illegible] சிகார இல்லை என்ப [illegible] றிலும் [illegible] நியா கருதுவது [illegible] யம்.

[illegible] ஐயரை, பிராமண [illegible] விதி விலக்கின் மூலியம் [illegible] விலக்க கருதுவதுதான் நமக்கு விளங்காததில் ஒன்றாக இருக்கிறது. "ஹிந்து" என்ற மதத்தினர்களின் சாமிகளில் ஒன்று மாரியம்மனாகும், ஹிந்து மதத்தில் முதன்மையானவர் [illegible] என்று சொல்லிக் கொள்ப [illegible] ர்கள் பிராமணர்கள். இவர் [illegible] வீடு அக்கிராமத்தில் 5 அல் [illegible] 6வீடுகள் இருக்கக்கூடும். [illegible] அய்யர்மார் வீட்டுக்கு [illegible] ட வரி விதிக்க வேண்டு மென் [illegible] சொல்ல அவ்வளவுகு [illegible] கிய மன [illegible] போக்கு நமக்கில்லை.

சர்க்கார் அப்படிச் செய்தால் ஓர் பிராமணரல்லாத தேவரிடமோ, சேர்வையிடமோ, அவர்கள் சென்று, சூத்திரர்களால் பிராமணர்களுக்கு தெண்ட தீர்வை கூட கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த பாவம் லேசில் போகாது என்ருல், ஐயருக்கு தேவரிடம் இரண்டு மூன்று வருடத்துக்கு கொடுக்கக்கூடிய அளவு பணம் வசூலாகி விடும் என்பதும் நமக்கு தெரியாததல்ல! ஆனல் இச்சிறு உத்திரவினல் மற்றவர்கள் உரிமை, மற்றவர்களின் நியாயமான நிலைமை, இவைகள் சீர் குலை ...பட்டு, சின்ன பின்னமாக ...மற்பட்டு விடுமோ! ...ான் அஞ்சுகிரோம். ...ந்துடன் மட்டும் ... பங்கு இதில் ...ெறது என்று ... ...ர ...பபத்தால் ...ழ்ந்து வ... ...(!) என்ப ...ந, எல்லாம் சிந்திக்க வேண் ...டுமெனக்கூறி, இக் குறிப்பை இத்துடன் நிறுத்துகிரோம்.

தோழர்

S. R. கண்ணம்மாள்

அவர்கள்

அப்பீல் வழக்கு முடிவு

இ... ...ண்டனைவேண்டாம்

தோழர்

ஈ. வெ. ராமசாமி

அவர்கள்

ராஜமகேந்திரவரத்திலிருந்... நாளது, 14ந் தேதி வாக்கில்... ஈரோட்டுக்கு விஜயமாவார்கள்.

ஈரோடு 'குடியரசு' பத்திரிகையில் சென்ற அக்டோபர் ... 20ந் தேதி 'ஏன் இன்றைய ...ட்சி ஒழிய வேண்டும் என்ற ம... டத்தின் கீழ் ஓர் தலையங்கம் வெளியாயிற்று. அக் கட்டுரையானது சர்க்கார்மீது துவேஷத்தை உண்டுபண்ணக் கூடியதாக இருக்கிறதென அதன் ஆசிரியர் தோழர் ஈ. வெ. ராமசாமி மீதும், அவரது சகோதரியும், ... பத்திரிகையின் பிரசுரகர்த்தாவுமான தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் மீதும் நடந்த வழக்கில், கோயம்புத்தூர் ஜில்லா மாஜிஸ்திரேட் தோழர் ரா...சாமி அவர்களுக்கு 6 மாதம் வெறுங்காவல் தண்டனையும், 300ரூ அபராதமும், தோழர் கண்ணம்மாளுக்கு 3 மாத சிறைதண்டனையும் 300ரூ அபராதமும், விதித்தார். பின்னர் தோழர் கண்ணம்மா ஜாமீனில் விடுதலை பெற்று ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார் தோழர் ஈ. வே. ராமசாமி ஜாமீனில் விடுதலை பெற மறுத்ததுடன், அப்பீலும் செய்து கொள்ளவில்லை எனவே அவர் தற்போது ராஜமகேந்திரவரம் சிறையிலிருந்து வருகிருர். ஷை அப்பீலின் பயனக ஹைகோர்ட் நீதிபதி கே. பி. லட்சுமணராவ், அவர்கள் நேற்று கீழ்க் கோர்ட்டார் தீர்ப்பை உறுதி செய்தாரெனினும், இரு எதிரிகளுக்கும் ...னை இது வரை அனுபவித்த சிறை தண்டனை காலத்திற்குக் குறைத்து விட்டார்.

கல்கத்தாவில் காந்தி பஹிஷ்காரம்.

மகாத்மா காந்தி ஹரிஜன சுற்றுப் பிரயாணத்தின் நிமித்தம் இங்கு வரும்போது அவருக்குத் தக்கபடி வரவேற்பளிப்பதைப் பற்றி யோசிப்பதற்காக "காந்தி வரவேற்புக் கமிட்டி"யின் ஆதரவில் இன்று காலை ஹாஸ்ராபார்க் என்ற நந்தவனத்தில் நகரவாசிகள் பொதுக்கூட்டம் ஒன்று நடந்தது "காந்தி பஹிஷ்காரக் கமிட்டி"யார் மேடைமீது தள்ளிக்கொண்டு ஏற முயன்றதால், அவர்களுக்கும் கூட்டத்தைக் கூட்டியவர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டு கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. கலகம் செய்ததாக 9 பேரைப் போலீசார் ...து செய்தனர்:—

...ரு கட்சிகளையும் சேர்ந்த 10 ... போலீசார் கைதுசெய்த ...ட்டத்தைக் கலைக்கை ...ரு போலீஸ் சப் இன்ஸ்...டருக்கு ...ாயமாகக் காய...மற்பட்டதென ... அறிவிக்கின்றது.

வங்காள சுற்றுப்பி... ...ணம் நின்றுவிடும்.

பாட்னவில் அகில இந்... ...ங்கிரஸ் கமிட்டி கூட்டத்தி... போய்விட்டு மகாத்மா காந்தி ஒர்ஸாவில் பாக்கியுள்ள இடங்களுக்குப் போக உத்தேசித்திருப்பதால் வங்காள சுற்றுப்பிரயாணத் திட்டத்தை நிறுத்திவிட்டால் நலமென்று டாக்டர் பி. ஸி. ராய்க்கு அவர் எழுதியிருப்பதாயித் தெரிகிறது.

பம்பாய் ஆலை வேலை நிறுத்தம்

கவர்ன்மேண்டின் முயற்சி.

பம்பாய் வேலை நிறுத்தக்காரர்களுக்குப் பொதுஜன ஆதரவு அதிகமாக ஏற்பட்டுவருவதைக்கண்டு இதுவரை வேலை நிறுத்தத்தைத் தகர்ந்து விடலாம் என்றெண்ணியிருந்த ஆலைக்காரர்கள் சற்று கவலைகொண்டிருக்கிருர்கள் இனி வேலை நிறுத்தத்தைக் குலைக்க ஏதாவது எற்பாடு செய்தால் துன்பம் தான் அதிகரிக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிருர்கள்.

ஃ ஃ

வேலை நிறுத்தக் கமிட்டியின் கோரிக்கைகளைக் கவனிக்க இன்று ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத்தினர் ஒரு கூட்டம் கூடினர்கள். 20 கோரிக்கைகளில் 4 கோரிக்கைகள் தான் நியாயமானவை என அவர்கள் கருதுகின்றனர். அவற்றில் சம்பளக் குறைவு விஷயத்தை தொழிலாளர்கள் ஆபீஸ்விசாரணை முடிந்தபின் கர்னிக்க ஒப்புக்கொள்ளுகின்றனர்.

ஃ ஃ

வேலை நிறுத்தம் செய்த தொழிலாளரைத் தண்டிக்க உத்தேசமில்லை தொழிலாளரோடு நல்ல சம்பந்தம் கொள்ளவே ஆலைக்காரர்கள் உத்தேசித்திருப்பதாகவும் மற்ற கோரிக்கைகளைச் சமரஸ போர்டுக்கு அறிவிக்கத் தயாராகவிருப்பதாகவும் கூறுகிருர்கள். ஜூன் மாதம் 3 வாரத்தில், தொழில் இலாகா ஆபீஸ்ரிபோர்ட்டு வெ வெளியாகும். ஆகவே இதர்கிடையில் போராட்ட நிறுத்தத்துக்காக ஒரு ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என அவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

ஃ ஃ

பம்பாயில் ரயில்வே கட்டணத்தைக் குறைத்தும், பருத்திப் பேல் கட்டணங்களை ரத்து செய்தும் துறைமுகக் கட்டணங்களைக்குறைத்தும் கவர்ன்மெண்...ார் வியாபாரத்தைப் பெருக் ... பார்க்கையில் இவ்விதம் ஆ... ...ள் மூடியிருப்பதை விரும்பம... ...ார்கள். பம்பாயில் ஆலைத்தொழில் முக்கியத் தொழிலாக விருப்பதல் அத்தொழில் நன்கு நடைபெருவிட்டால் வியாபாரம் அங்கு வலுக்காது ஆகவே அவர்கள் வேலை நிறுத்தக் கமிட்டி பிரதி நிதிகளையும், ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கப் பிரதிநிதிகளையும் ஒன்று கூட்டி யோசிக்க விரும்புகின்றனர். ஆலைச் சொந்தக் காரர்கள் இந்த அபிப்பிராயத்தை ஆஷேபிக்கவில்லை, வேலை நிறுத்தக் கமிட்டியின் மனப்பான்மை இன்னதெனத் தெரியவில்லை.

விருதுநகர் முஸ்லீம் கலகம்

கீழப்பள்ளி வாசலில் முஸ்லீம்களின் கூட்ட மொன்று 11தேதி நடந்தது. தெரு கக்ஷி சம்பந்தமாக பேசினர்கள். அபிப்பிராய பேதம் ஏற்பட்டதால், அவர்களுக்குள்ளேயே கல்லெறிந்துகொண்டார்க்ள். சிலருக்கு இதனல் காயம்

ஸ்டாவிஸ்கி மோசடி.

கொலையாளிகள் யார்?

பிரான்ஸில் மகத்தான மோசடி செய்த ஸ்டாவிஸ்கி மாண்டு விடானெனினும், அவன் மோசடி சம்மந்தமாக கொலை நடப்பது இன்னும் நின்ற பாடில்லை, ஷை கொலைகளுக்குக் காரணஸ்தர்கள் யார் என்பதையும் கண்டுபிடிக்கவில்லை. 19 வயதுள்ள ஸ்ரீமதி ஹென்ரியட் என்ற பெண் தமது கணவன் வீட்டில் சுடப்பட்டு மாண்டுகிடந்தாள். அப்பெண் ஜில்லா பப்ளிக் பிராசிகியூடரின் மருமகள் மேற்படி பிராசிகியூடர் வெளிப்படுத்திய சில ரகசியங்களிலிருந்தே பிரான்ஸில் ஸ்டாவிஸ்கிக்கும், அரசியல் வாதிகளுக்கும் சம்பந்தம் உண்டென்பது தெரியவந்தது.

ஜரிகைக்கம்பிப்பட்டு அங்க வஸ்திரங்கள்

மிக அழுத்தமாய் நல்லமிருதுவான பட்டில் செய்யப்பட்டது. நீடித்து உழைக்க கூடியது. சலவைக்குப் போடலாம். உத்திரவாத முள்ளது.

5முழம் ஜரிகைக்கம்பி யுள்ளது 1-க்கு விலை ரூ 4-0-0

5முழம் சாதா ப்ளேயன் 1-க்கு விலை ரூ 3-4-0

என்- பி:- இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு மட்டும் பாக்கிங் தபாற்செலவு இனமாய் அனுப்பபடும்-

The indo Malaya Fancy Silk Works, Benaros City.

(8ம் பக்கத் தொடர்ச்சி)

சம் நாசிசம் ஆகியவைகளைப்பற்றி விஸ்தரித்துக்கூறுவோம்.

கஷ்ட நிவாரண இயக்கம்.

அமெரிக்காவிலுள்ள கஷ்ட நிவாரண இயக்கமென்பது, அமெரிக்கா தலைவரால் அவர்போக்கின்படி, கஷ்டத்தால் அவதிப்படும் அமெரிக்கத் தொழிலாளிகளுடையவும் மற்றவர்களுடையவும் மேம்பாட்டின் உயர்வுக்காக எடுத்துக்கொண்ட முயற்சியாகும். அது அமிழ்த்திகொடுமைப்படுத்தப்பட்ட தொழிலாளிகளின் நலனுக்காகவே ஏற்பட்டிருப்பதைத்தவிர்த்து, வேறு எதற்கில்லாவிட்டாலும் அதற்காகவே அதை வரவேற்க கடமை பட்டிருக்கிறோம். மற்றும் இந்த நிவாரண இயக்கம் தொழிலாளர்களுடைய வகுப்பு உணர்ச்சியை எழுப்பிவிடுகின்ற முறையிலும் நாம் அதை பனப்பூர்வமாக வரவேற்கின்றோம்

ஸ்பெயினிலும், மற்ற இதர நாடுகளிலுமுள்ள தொழிலாளர்கள்; சோஷலிசத்தை எந்த முறையிலாவது, எந்த ரூபத்திலாவது அமைத்துவிட பலமாக முயற்சிக்கிறார்கள். இன்றைய உலக அமைதியின்மையிலேயுங்கூட உலக விவகாரங்களை நுட்பமாகப் பரிசீலனை செய்வோர்கள், நாம் சோஷலிசத்திற்கு நன்கு செல்வதை தெளிவாக உணரக் கூடும். மிக நெருங்கிய காலத்தில் இல்லாவிட்டாலுங்கூட, சமீப காலத்திற்குள்ளாவது சோஷலிசமானது உலக விதியாக அமையப்போவது நிச்சயம். ஆகவே நாம் அதை நன்கு தெரிந்து கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் நெருங்கிவருகிறது. அது இந்தியாவிற்கு உகந்ததா என்று நாம் பரிசைஷ செய்ய வேண்டும். அதோடு நாம் உலகத்திற்கே எவ்வித சோஷலிசம், தக்கதென்பதை நாமே தெளிந்து முடிவுகட்டிக் கொள்வோம்.

மற்ற பல நாடுகளில் இருப்பதைப் போலவே இந்தியாவிலும் சோஷலிசத்திற்கு சாதகமான இயக்கம் தேசம் பூராவும் பரவி இருக்கிறது. சோஷலிசத்தை பரப்புவதற்காக நூற்றுக்கணக்கான சங்கங்கள் நாடு முழுமையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற தத்துவமானது தென்னாட்டில் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. தென்னாட்டில் சர்வ சாதாரணமாக வியாபித்துள்ள சமதர்ம பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதே இதன் தொடர் கட்டுரைகளின் நோக்கமாகும்.

சோஷலிசமென்றால் என்ன? அது எந்த முறையில் இன்றைய கொடுமைகளுக்கு இயற்கையான பரிகாரமாகும் என்று யோசியுங்கள். சோஷலிசத்தின் சாஸ்திர சம்பந்த ஆராய்ச்சியைக் குறித்து பின்னர் கவனிப்போம். சோஷலிஸ்டுகள் முடிவை உணர்ந்தவர்களாவார்கள்; அதாவது இயற்கையின் சக்திகளுக்கு, தன்மைகளுக்கு, ஏற்றது போலவே எல்லா சம்பவங்களும் நிகழ்கின்றனவேயன்றி, வேறு எந்த முறையாலுமல்ல என்பவர்கள் இன்றைய கொடுமைகளிருந்து ஏற்பட்ட பலாபலனே சோஷலிசமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இன்றைய மனித போக்கானது முரணானதாக இருக்கிறது. அது இயற்கையிலேயே இயற்கை விதிகளின் முடிவின்படி தானே சோஷலிசத்திற்கு சென்றுகொண்டிருக்கிறது தேவை வேண்டியவர்களுக்கு இல்லாமையைப் போக்கும், அதி சாதாரண பரிகாரத்தைத் தவிர, அது பணக்காரர்களிடமுள்ள அதிகப்படியான சொத்தை (வலுவற்றவர்களிடமிருந்து) கேட்டும், [வலுவுள்ளவர்களிடமிருந்து] பிடுங்கியும் நிலைமையை ஒழுங்கு படுத்துகிறது.

இதற்குத்தான் சோஷலிசமென்று பெயர். தொழிலாளர்கள் சோஷலிசத்தை ஸ்தாபிப்பதற்காக, முதலாளிகளிடமிருந்து அதிகாரத்தை சட்ட பூர்வமான அமைப்பு முறைகளாலோ, அன்றிபலாத்கார முறைகளாலோ கைப்பற்ற வேண்டும். இதற்கு அடுத்தபடியாக சகல சமுதாய மக்களுக்கும், சௌக்கியத்தை சரியாக பகிர்ந்து கொடுக்க முன் வர வேண்டும். சோஷலிசத்தின் அமைப்பு முறையின் பல அம்சங்களைப் பற்றி நாம் பின்னால் ஆராய்வோம்.

சோஷலிசத்தையே இன்னதென்றறியாத, எனக்குத் தெரிந்த ஒரு யோக்கியமான—புத்திசாலி வாலிபனின் வழ்மையின் துயரங்களே அவனை சோஷலிசத்திற்குக் கொண்டு செலுத்தியது. அப்பேர்ப்பட்ட வாலிபனின் துயரங்களே அடுத்த கட்டுரையின் விஷயமாகும். அதுவே உலகத்தின் கஷ்டங்களுக்கு சர்வ சாதாரணமானதும், இயற்கையானதுமான பரிகாரம் சோஷலிசமே என்று எடுத்துக் காட்ட போகிறதாகும்.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

களில் நோயுற்றவர்களாய் எலும்புந் தோலுமாய் கந்தை மூட்டைகளுடன் இறங்குவதை இன்றும் நாம் காணலாம். இப் பரிதாப நிலைக்கு, பயங்கர வறுமைப் பிணிக்கு, சுய தேசத்தை விட்டு பரதேசத்தை நாடி ஓடும் கொடுமைக்கு முதலாளித்துவம் ஒரு பெருங் காரணமாகும். மற்றும் மூடப் பழக்க வழக்கங்கள் என்ற மத ஊழல்களும் காரணங்களாகும்.

வறுமைக்கோர் மருந்து

மேற்கூறிய வறுமைக்குக் காரணமாய் முதலாளித்தனம் என்று குறிப்பிட்டேன். எப்படி? ஒரு தொழிற்சாலையை எடுத்துக்கொள்ளுவோம். அச் சாலையில் வேலை செய்வோர் யாவரும் தொழிலாளிகள். அங்கு நடைபெறும் சகல காரியங்களும், தொழிலாளர்களால்நடத்தப் படுகின்றன. அவர்களின சம்பளமோ மிகக் குறைவு. வேலையோ அதிகம். வேலையோ மிகக் கடுமை. தொழிற்சாலையில் வரும் லாபம் யாவும் சாய்வு மேஜைகளின் மீது சாய்ந்து அதிகாரம் செலுத்தும் சோம்பேரிகளாகிய முதலாளிகளென்போர் அனுபவிக்கின்றனர். இத் தொழில் முறையினால் முதலாளிகளிடம் முதல் பெருக, வயிறு பெருக, வயிறு பெருகுவதனால் சோம்பேறிக் குடும்பங்கள பல உண்டாகவும், தேவைக்கு அதிகமான, அவசியத்திற்கும் மீறி பொருள் சேர, தொழிற்சாலையின் முக்கியஸ்தர்களான தொழிலாளிகள் தமக்குக் கிடைக்கும் ஊதியம வயிற்றுக்கே போதாமல் தினே தினே கடன்பட்டு வறுமைகளாய் வாடுகின்றனர். பணக்காரன் ஏழை யென்றோ, முதலாளி தொழிலாளி யென்றோ, ஏவுகிறவன் ஏவலாளி யென்றோ, யாதொரு பேதமின்றி சரிசமமாக உழைக்க வேண்டும், பாடுபட வேண்டும், போதிய பலனைப் பெற வேண்டும், அதனால் எல்லோரும் உணவு கொள்ளவேண்டும். உடுக்க வேண்டும், ஓய்வு கொள்ள வேண்டும்: உலக போகங்களை சுகமாகவே அனுபவிக்க வேண்டும். இத்தகைய, மனிதனுக்கு சாதகமான ஒழுக்க நீதிகளைக் கொண்டது தான் பொதுவுடைமை தத்துவம். அது தான் மனிதனைச் சுகம் பெறச் செய்வது. அது தான் ரஷியத் தொழிலாளரை மீளா வறுமையினின்றும் நீக்கி அந் நாட்டை உலக நாடுகளிலேயே முதல் நாடாக நிற்கச்செய்தது. அதுதான் பசிப் பிணியாற்றும் பரம ஔஷதம்.

இரண்டாவதாக மத ஊழல்களை மண்ணைத் தோண்டிப் புதைக்கச் சொன்னேன். ஏன்? இந்திய தேசம் மத வெறிகொண்ட நாடு. இத் தேசத்திற்கும் கோவில்களுக்கும் வெகு நேசம். முதலில் கோவிலை ஒழித்து கலாசாலைகளாக்க வேண்டும். நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, லக்ஷக்கணக்கான ரூபாய்கள் தினந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும் இக் கோயில்களால் தான் செலவழிகின்றன. கோயில் என்று ஒன்றிருந்தால் அங்கு வணக்கப் பொருளாக அம்மனையோ, கருப்பனையோ வைக்கிறார்கள். அவுலியாக்களென்றும், பீர்களென்றும் கூறி சமாதி கட்டுகிறார்கள். அம்மனை வைத்த பிறகு, அந்த அம்மாளுக்கு புடவை வாங்கித்தரவேண்டும் (ஐயோ அம்மனுக்குப் புருஷர் வீடில்லையா?) காது குத்தி வயிரக் கம்பல் போட வேண்டும், மூக்குத்தி, புலாக்கு போடவேண்டும். முரட்டு தேவதைகளின் பேரால், கருங்கல்லின் பேரால், இறந்து மண்ணோடு மண்ணாய்ப் போன அவுலியாக்கள் பீர்கள் இவர்களின் பேரால், பாமர ஜனங்களை ஏமாற்றி, வயிறு வளர்க்க [illegible] அறியாது வேதத்தை வளர்த்து பணம் பறித்து ஏகாதி பத்தியம் செலுத்துகின்றனர்.

இம் மட்டோ! அப்பப்பா! வருடந்தோறும் திருவிழாக்களில் நடைபெறும் திருவிளையாடல்களென்ன, சிவப்புத் தலை[illegible] கருப்புத் தடிகளைக் கையிலேந்தி காவல் காக்க, வாயில்லா மிருக ஜீவன்களாகிய ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட ப[illegible]ள்ள மனிதன் கையிலே ஏந்தி நிற்க, நூற்றுக்கணக்கான மக்கள் சங்கிலிகளைக் கொண்டு தேரைக் கட்டி இழுக்க, பேசாம[illegible] பவனிவரும் கோலம் மகா[illegible]ங்கோலமே.

அரசியல் சீர்திருத்தமென்பது ஹம்பக்!

(7ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய முடியும்? நமக்கு விவாகம் நடந்த காலத்தில், நான் தனியாக வியாபாரம் செய்து கொண்டு வந்தேன். நாளுக்கு நாள் அந்த வியாபாரம் க்ஷீணிக்க ஆரம்பித்ததினால், நான் ஏதாகிலும் ஒரு வேலையைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லையாகில் நாமிருவரும் பட்டினி கிடந்து சாக வேண்டியதே தான். நமது சொந்த வீடோ அடமானத்திலிருக்கின்றது அதற்கு நாளது வரையிலும் ஒரு தம்படியேனும் கடன் வாங்கிய துகைக்காக செலுத்தப் படவேயில்லை. மூன்று மாதத்திற்கொருதடவை அந்த அடமான துகைக்கு வட்டியானது தவறாமலும், ஒரு பைசாவேனும் குறைவின்றியும் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினாலோ, வீட்டை ஏலத்திற்குக் கொண்டு வந்து விடுவதாக, வீட்டின் பேரில் பணம் கொடுத்தவன் உரைத்து நம்மை மிரட்டுகின்றான். வரியோ, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது இதையும் நாம் தவறாமல் செலுத்தியேதான் தீர வேண்டும். இப்பொழுது நாம் கொடுக்கும் வரியோ, யுத்தத்திற்கு முன் நாம் வாடகைக்கு குடியிருந்த ஓர் வீட்டிற்குக் கொடுத்துக் கொண்டு வந்தவாடகையைவிடப் பன் மடங்கு அதிகமாகவேயிருக்கின்றது. அப்படியே கொடுத்தும் வருகின்றோம்.

"மக்கள் உணவுகளுக்குரிய பொருள்களின் விலையோ இன்னும் குறைந்தபாடில்லை; நாம் உடுத்திக் கொள்ளும் இந்த சாதாரண உடைகளின் விலையோ அபரிமிதமாக ஏறிப் போய் விற்கின்றது. அப்படி. விற்ற போதிலுங் கூட, துணியாகிலும் முன் இருந்ததைப் போல நயமாகத்தானிருக்கின்றதா? அதுவும் இல்லை. அல்லது உடையாகிலும் நீடித்துத் தான் வருகின்றதா? அதுவும் கிடையாது. விளக்குச் செலவும், விறகுச் செலவும் முன் இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாகவே இருககின்றது. இவைகள் தான் இப்படியென்றாலும் ரயில் சார்ஜாவது குறைந்திருக்கின்றதா? யுத்தத்திற்கு முன் இருந்த சார்ஜைக் காட்டிலும், இப்பொழுது ரயிலுக்கு சார்ஜ் மும்மடங்கு அதிகமாக்கப் பட்டிருக்கின்றது. இந்த ரயில் சார்ஜானது இன்னும் அதிகப் படுத்தப்பட்டே வரும் போலவும் காணப்படுகின்றது.

"பத்துவருடங்களுக்கு முன் நாம் செலவு செய்து கொண்டு வந்தது போல் இப்பொழுது செலவு செய்வதற்கில்லை. அதிகப்படியான சிக்கன முறையையே நாம் இப்பொழுது கையாள வேண்டியிருக்கின்றது. பணக்காரர்களும், பெரியபெரிய வியாபாரிகளும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் சம்பாதித்து வந்ததை விட, தற்காலம்அதிகமாகவேசம்பாதித்து, இலாபமடைந்து கொண்டு வருகின்றார்கள். நான் வேலை செய்து கொண்டு வரும் கம்பெனியானது முன் ஓர் சாதாரணக் கம்பெனியாக விருந்து, இப்பொழுது சென்னை மாகாணத்திலேயே எக்கம்பெனியும் தனக்கு ஈடில்லையெனவும், நிகரில்லையெனவும் திகழுகின்றது மேலும், நாளுக்கு நாள் அதிகப்படியான இலாபத்தையும் அடைந்து கொண்டே தான் வருகின்றது. நான் அக்கம்பெனியில் முதன் முதலாக வேலைக்கமர்ந்த பொழுது என்னுடைய ஊழியத்திற்கிருந்த மதிப்பைக் காட்டிலும், கௌரதையைக் காட்டிலும், அவசியத்தைக் காட்டிலும் இப்பொழுது என்னுடைய ஊழியத்திற்கு அக்கம்பெனியில் பதின் மடங்குஅதிகமானமதிப்பும், கௌரதையும்அவசியமும்ஏற்பட்டிருக்கின்றது. சுருக்கமாக உரைக்க வேண்டுமேயானால்,என் ஒருவனுடைய ஊழியத்தினால் தான் அக்கம்பெனியின் செல்வம் விர்த்தியாகிக் கொண்டு வருகின்றதெனவே கூற வேண்டும்"

"இந்த விஷயங்கள் யாவும் என்னுடைய கம்பெனியின் சொந்தக்காரனுக்கு மிக்க நன்றாகவே தெரியும். இன்று நான் அந்தக் கம்பெனியின் சொந்தக்காரனை சந்தித்து, என்னுடைய சம்பளத்தில் கொஞ்சம் அதிகப் படுத்தும்படியாககெஞ்சிக் கேட்டேன். நான் கேட்பது தான் தாமதம்-நீ அதை நம்புவாயா? நான் உரைப்பதை செவி கொடுப்பதற்கே அவன் மறுத்துவிட்டான். அத்துடன் அவன் விட்டானா? இல்லவே இல்லை. என்னை ஓர் பார்வை பார்த்தான். ஒரு மனிதனுடைய பார்வைக்கு வேறு ஓர் மனிதனை நாசமாக்கக் கூடிய சக்தியானது இருந்திருக்குமேயானால், நான் இவ்வளவு நேரம் வரையிலும் உயிருடனிருந்திருப்பேனென உண்மையாகவே உரைப்பதற்கில்லை. ஏனெனில், அவனுடைய பார்வை அவ்வளவு பயங்கரமானதாகயிருந்தது. அவனுடைய கண்களிரண்டும் சிவந்து, கோபத்தணல் வீச, என்னை "வெளியே போ" என அவன்உரைத்ததுடன், "உனக்கு இங்கே கொடுக்கப்படும் சம்பளமானது போதாதென நீ நினைப்பாயேயானால், அதிகப்படியான சம்பளம் கிடைக்கக்கூடிய இடத்திற்கு நீ தாராளமாகச் செல்லலாம்" எனவும் உரைத்துவிட்டான். நான் இருக்கக்கூடிய கஷ்டமான நிலைமையானது அவனுக்கு நன்றாகத்தெரியும். மேலும்,இக்காலத்திலொருவனுக்கு ஒருவேலை சுலபத்தில்அகப்பட்டு விடுமென கூறுவதற்கில்லை யென்பதும் அவனுக்கு நன்றாகவேத் தெரியும்.இக்காரணங்களால் நான் வேலையை விட்டு நின்று விடக்கூடியவனல்லவென்பதும், இருப்பதை விட்டுவிட்டு பறப்பதைப்பிடிக்க முயற்சி செய்யக்கூடிய ஓர்பைத்தியக்காரனல்லவென்பதும்அவனுக்கு நன்றாகத்தெரியும். கொடுமைப்படுத்தப்பட்ட பலஇலட்சக்கணக்கான மக்களில் நானும் ஒருவன் ஆவேன். ஒரு சில மக்களின் இன்பகரமான சுகவாழ்விற்காகவேண்டி பலியிடப்பட்ட எண்ணிக்கையற்ற மக்களில் நானும் ஒருவன் ஆவேன். மக்களின் இந்தக் கொடுமையானது எப்பொழுதுதான் ஒழியுமோ தெரியவில்லை.

"நான் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பொழுது இந்தப்பத்திரிகையை என்னிடம் ஒருவர் கொடுத்தார். மற்ற மக்கள் படும் அவஸ்தையைக்காட்டிலும், துன்பத்தைக்காட்டிலும், அவர்களுடைய நிலைமையைக்காட்டிலும் நமது நிலைமையானது அவ்வளவு பயங்கரமானதாகவும் காணப்படவில்லை. அவ்வளவு மோசகரமாயிருப்பதாகவும் நான் நினைக்கவில்லை. கொடுமைப்படுத்தப்பட்டவன் ஏதாகிலும் ஒன்றின் சிநேகத்தையும், துணையையும் இச்சிக்கின்றான்.ஆகையினாலே, இன்று மாலை நான் சென்னையிலிருந்து இவ்விடம் பிரயாணம் செய்துகொண்டுவரும்பொழுது இந்தப் பத்திரிகையை மிக்க ஆவலுடனும், கருத்துடனும் நான் வாசித்துக் கொண்டே வந்தேன்" (தொடரும்)

பஞ்சாப் சதி வழக்கு அப்பீல் முடிவடைந்தது

லாகூர் மே 10

சுமார் 3 மாத காலமாக நடைபெற்று வரும் பஞ்சாப் சதியாலோசனை வழக்கின் அப்பீல் இன்று முடிந்து விட்டது. ஆனால் தீர்ப்பு ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது

இந்த வழக்கில் 16 பேர்கள் குற்றம் சாட்டப் பட்டிருக்கிறார்கள். இந்த 16 பேர்களில் இருவருக்கு கீழ் கோர்ட்டு தூக்கு தண்டனையும், 3பேர்களுக்கு தீவாந்திர சிக்ஷையும், 11 பேர்களுக்கு, இரண்டு வருஷம் முதல் 7வருஷக் காடுங்காவல் தண்டனைகளும் விதிக்கப்பட்டன.

சுயமரியாதை பிரசாரம்.

(நமது நிருபர்)

வேலூர், மே, 10—இவ்வூர் காந்தி மைதானத்தில் இம்மாதம் 13ந்தேதி கூடும் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் குஞ்சிதம், குருசாமி, கே வி. அழகர்சாமி, வி. பார்த்தசாரதி ஆகியவர்கள்விஜயம் செய்து தற்கால நிலைமை, மேதினவிழா என்பது என்ன உலகதொழிலாளிகளின் நிலைமை, முக்கியமாக இந்திய தொழிலாளிகள் இப்போது படும் துயரம் சமதர்மத்தின் நோக்கம், புரோகிதன், முல்லா பாதிரி என்போர்களால் மக்களுக்கு நேரும் அவதி என்பதைப் பற்றியும் பேசப் போகின்றார்களாம். இந்த சுயமரியாதை சங்கத்தினர் இவ்வூர் தோட்டப்பாளையம் தோழர் கோதண்டராமு முதலியார் ஒற்றவாடை கட்டட மெத்தை மீதுஜில்லாஆபீசைஆரம்பித்து சுமார் 50 பேர்கள் மெம்பர்கள் கூட சேர்ந்திருக்கின்றனர். சீக்கிரமாக ஜோலார்பேட்டையில் ஜில்லாவின் சார்பாக பிரசாரம் செய்ய ஒருபத்திரிகையை ஆரம்பம் செய்ய அச்சுயந்திரங்கள் வாங்குவதற்கும், அதற்கு மேலதிகாரிகளிடம்உத்திரவு பெறுவதற்காக தினங்களுக்கு முன் ஜோலார்பேட்டை தோழர் வி. பார்த்தசாரதி இங்கு வந்து போனார்.

அறிவே விடுதலை

(சாமி சிதம்பரனார்)

(ஆனந்தக் களிப்பு)

பல்லவி.

அறிவே விடுதலை என்போம்—அதுவே
அனைவர்க்கும் இன்பம் அளித்திடும் என்போம் (அறிவே)

சரணங்கள்.

1. ஆயிரங் காலத்துச் செய்கை—யாக
ஆயினும் அறிவினுக் கொத்தில தாயின்
சீயென் றவைகளைத் தள்ளி—மிகவும்
சிறப்புடன் வாழும் நெறியுணர் வோமோ (அறிவே)

2) மேதினி வாழ்ந்திடும் மக்கள்—யாரும்
மேன்மைக் குலத்தினில் ஒன்றெனக் கொள்வோம்.
சாதி மதங்களைத் தாக்கி—பெரும்
சங்கடம் பாவும் அழித்திடு வோமே (அறிவே)

3. சாதி மதங்களைப் போற்றும் —கெட்ட
சாத்திரம் எவருரை யாயினும் அவைகள்
ஆதி கடையொடும் போக—பெரும்
ஆத்திரத் தோடெரி யுண்டிடச் செய்வோம்! (அறிவே)

4 அறிவிற் குரிமையும் தந்தே—இந்த
அவனியில் யாரும் அதன்வழிச் செல்லின்
வறியவர் செல்வருள் நிகழும்—சண்டை
வாடிச் சமத்துவம் வளர்ந்திடும் கண்டீர்! (அறிவே)

5. உழைக்கும் மனிதர்கள் எல்லாம்—இங்கே
உணவின்றி வாடுதல் நீதியோ உலகீர்!
பிழைத்திடும் சோம்பல் மிகுந்தோர்—மிக்க
பேரின்பம் பெற்றிங் கிருத்தலும் முறையோ? (அறிவே)

6. அச்சம் அகற்றுவோ மாயின்—நாம்
அணுத்துணைத் துன்பமும் பெற்றிட மாட்டோம்;
நிச்சயம் அறிவுகைக் கொண்டால்—நேரில்
நில்லாமல் ஓடிடும் அச்சமும் கண்டீர்! (அறிவே)

7. பெருநிதி என்பதும் அறிவே—இதனைப்
பெரிதும் மனத்தினிற் கொள்ளுவீர் இனிதே
அரும்பொருள் எத்துணை பெறினும்—இங்கே
அறிவினுக் கவையெல்லாம் ஒப்பல்ல காணும்! (அறிவே)

8. ஆண்மையும் ஊக்கமும் அறிவே—அதுவே
ஆற்றும் அருஞ் செயல் செய்திடத் துணையே
கேண்மையும் சுற்றமும் அறிவே—அதுதான்
கேடில் சமத்துவம் கிளைத்தெழும் வித்தே [அறிவே)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

விருக்கின்றனர். இவர்கள் மூட முல்லாக்களின் ஆதிக்கத்திலிருக்கின்றனர். முஸ்லிம் சமூக ஊழல்களை வெளியிடுவதென்றால் சுயநலப் புலிகளாகிய ஒரு சில ஆஷாடபூதிகளாக விளங்கும் முஸ்லிம் வைதீக முல்லாக்களின் ஊழல்களை வெளியிடுவதாகும். அவர்களின் பரம்பரை பாத்யதைக் குலைப்பதாகும். அவர்களின் சோம்பேறி வாழ்வில் மண்ணையள்ளிப் போடுவதாகும். இல்லை அவ் வர்க்கத்தினரை அறவே ஒழித்துவிடுவதாகும். ஒருசில பகுத்தறிவாளர்களாகிய முஸ்லிம்களும் அவர்களால் நடாத்தப்படும் பத்திரிகைகளும் படும்பாடு உலகறிந்ததே! இவர்கள், பாபம்! என் செய்வார்கள்! சந்தர்பங்கண்டு வெகு ஜாக்கிரதையாகவும், நிதானமாகவும் நடந்து கொள்ள வேண்டியிருக்கின்றது. பல ஓநாய்களினிடையில் ஒரு அறிவுள்ள பிராணிநடந்துகொள்ளவேண்டிய முறையில்தான் நடந்துகொள்ள வேண்டியிருக்கின்றது. அதிதீவிரமாய் எதும் செய்தால் உள்ளதுக்கும் மோசம் போல் தோன்றுகின்றது! காலதேச வர்த்தமானத்தை எண்ணி நான் எழுதும் விஷயங்களை முஸ்லிம் சமூக ஊழல்களை, அதிதீவிரப் புரட்சியில் ஈடிபட்ட பத்திரிகைகள் மூலமாய்த் தான் வெளியிடவேண்டியிருக்கின்றது. முஸ்லிம்களின் மற்றோர் இயற்கைக் குணமென்னவென்றால், அவர்களைக்குறித்துக் கூறும் வரையில் 'யாருக்கோ' வென்று இருந்துவிடுவதாகும். புரட்சி, பகுத்தறிவு முதலிய பத்திரிகைகளின் மூலமாக நடாத்தப்படும் கிளர்ச்சிகளெல்லாம் ஹிந்து கிறிஸ்தவர்களை மட்டும் பாதிக்கின்றது என்று முஸ்லிம்கள் கருதுகின்றார்களே யொழிய, தங்களையும் பாதித்துக் கொண்டு வருகின்றது என்பதை இவர்கள் உணர்ந்து கொள்ள உணர்ச்சியற்றவர்களாகவிருக்கின்றனர். சில மாதங்களுக்கு முன்னர் குடிஅரசில் முஸ்லிம்களைக் குறித்து சிலர் ஏதோ எழுதி விட்டதைக் கண்டு தமிழ் முஸ்லிம்கள் துள்ளிக்குதித்தார்கள். நானும் பொருமையிழந்தேன். பின்னர் கு. அ. முஸ்லிம்களைக் குறித்துப் பிரத்தியேகமாக ஒன்றும் எழுதாமல் விட்டு மறைமுகமாகத் தாக்குவதை இவர்கள் உணரக்கூடாதவர்களாக விருந்தனர். மேலும் சமீபகாலமாக முஸ்லிம்களே குடிஅரசில் தங்கள் ஊழல்களை மதவேத ஆதாரங்களுடன் தர்க்க ரீதியுடன் வெளியிடுவதைக் கண்டு, கண்திறந்து, வாய்பிளந்து, பேசநாவெழாமல், எழுதக் கைவராமல், மறுப்பு மனதில் தோன்றாமல் திகைத்திருப்பதும் வெள்ளிடை. இதுகொண்டே நானும் 'புரட்சியில்', முஸ்லிம்களிடையில் புரட்சியை உண்டாக்கிவிட உத்தேசித்துஇச்சமூகத்தின்ஊழல்களை வெளியிடத்துணிந்தனன்.

புரட்சி ஆசிரியரவர்களுக்கு ஓர் வேண்கோளுடன் இக்கட்டுரையை முடித்துக் கொண்டு தலையங்கத்தில் கண்ட விஷயத்தைக் குறித்து மேலும் தொடர்ந்து எழுதுவேன்.

நவீன முஸ்லிம் சமூகம் உலகத்தில் ஓர்மாபெரும் மதப்(பித்து) பற்றுக் கொண்ட சமூகமாகும். இச்சமூகம் கண் விழித்தால் மனித சமூகமே கண்விழித்ததாகும். உண்மையே. 'புரட்சி' சமூக வாதத்துக்காகவன்றி அகில உலக மனித முன்னேற்றத்துக்காக விளங்குவதாகும். மனித சமூகத்தின் ஓர் பாகம் முஸ்லிம் சமூகமாகும். காலதேசவர்த்மானத்தையும், முன் கூறிய காரணங்கொண்டும் முஸ்லிம் சமூகத்தை பிரத்தியேகமாகக் குறித்து அச்சமூகததினர்களால் எழுதப்படும் ஆதாரமும் ஆராய்ச்சியும் மிக்க உயரிய கட்டுரைகளை வெளியிட்டு முஸ்லிம்களையும் புரட்சியில் கலந்து கொள்ளும்படி செய்ய சந்தர்ப்பமளிக்க முன்வருவார்களென்று நம்புகிறேன். மேலும் நான் புரட்சியில் ஈடுபட்டு சந்துஷ்டியுடன் கூடியவரையில் உழைப்பேன் என்பதையும் இத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுயராஜ்யம் யாருக்கு?

(ஆசிரியர்:- தோழர்
ம. சிங்காரவேலு பி.ஏ.,பி.எல்.,)

சுயராஜ்யம் யாருக்கு என்ற புஸ்தகத்தின் மூன்றும் பாகம் அதாவது எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகம் அச்சாகி விட்டது. புஸ்தகம் வேண்டுமென்று ஏற்கனவே பணமும், ஸ்டாம்பும் அனுப்பியவர்களுக்கு, இவ்வாரத்திற்குள் புஸ்தகங்கள் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே கைவசமிருப்பதால், புஸ்தகம் வேண்டுவோர் முந்திக்கொள்ள வேண்டும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

உலக முக்கிய பிரச்சினை, தேசீயமும் மூட நம்பிக்கையும், சுயராஜ்யமும் தனி சொத்துரிமையும் சமதர்ம லக்ஷணம், சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, தேசீய அரசுகள் இருக்கா, சமதர்ம ஆக்ஷிமுறை, ஜாதி மதம் ஒழிக்கும் வழி, தனிவுடமையின் கொடுமை, பொதுவுடமை விளக்கம், சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம், சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

இதன் விலை அணா 3.

கிடைக்குமிடம்:—

சமதர்மப் பிரசுராலயம்,
22, சவுத்பீச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை

"பண்டிதரும்—தீண்டாமை விலக்கும்"

(சென்னை தோழர் கே. எஸ். நாதன்)

பண்டித மதன்மோகன் மாளவியா ஓர் பேரறிஞர். அவர் இந்து மதநூற்களைநன்குகற்றுணர்ந்துஅதன் தத்துவார்த்தங்களை புகழ்பவர். இந்து மதத்தினுடைய 'பெருமை' இன்னதென உரைக்க முடியாதபடி, அந்த சாஸ்திரப்படியே கப்பலில் பிரயாணம் செய்தால் ஏற்படும் 'பிராயசித்தத்தை'ப் போக்க கங்கா ஜலத்தையும்—களிமண் உருண்டையையும் வட்டமேஜை மகாநாட்டிற்கு பிரதிநிதியாக அழைத்தபோது சுமந்து சென்றவர். சுருங்கக்கூறின், இந்தியா இந்துமத மயமாக்கவேண்டும் என்னும் பேரபாவடைத்த அறிவு—ஆற்றல்—ஆராய்ச்சி அனுபவங்கள் ஒருங்கே அமையப் பெற்றபேரறிஞர். இவரிடத்தில் ஒரு குறை உண்டு. அது தான் "வழ—வழ—கொழ—கொழ" சமாசாரம். எந்த விஷயத்தை பேசினபோதிலும் இப்பெரியார் அவருடைய அந்தரங்க முடிவை வெட்ட வெளிச்சமாக "ஒரு வெட்டு-இரண்டு துண்டு" என்ற முறையில் பேசா அன்பர். இவருடைய ஒவ்வொரு கொள்கைகளிலும், அபிப்பிராயங்களிலும் 'ஆனால்' என்ற 'ஆல்' விகுதியை சர்வசாதாரணமாகக் காணலாம். ஆயினும் தற்போது தேசிய போராட்டத்தை நிறுத்தி— சமூக போராட்டத்தில்— ஆதிதிராவிடர்கள் முன்னேற்றத்திற்காக 'ஹரிஜன' வேலையை காந்தியார் துவக்கினதிலிருந்து இதற்காக பண்டிதரும் மிக பிரயாசைப்பட்டுவருகிறார். பண்டிதர் தீண்டாமையைவிலக்கவேண்டுமெனக்கருதின முறையில், சில ஆதிதிராவிட இளைஞர்களை அழைத்து கங்கா நதி ஓரத்தில் உட்காரவைத்து 'இராம நாம' மந்திரத்தை கற்பித்து, பூணூலை அணியச் செய்ததை நம் நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இச் செய்கையிலிருந்தே இவருடைய தீண்டாமைவிலக்குவேலை 'மகிமை' புலருகிறது. இவற்றிற்கெல்லாம் அவரை குறைகூறுவதற்கில்லை. அவர் படித்த-அவர் மூளையில் பெரும் பதவி ஏற்று குடிகொண்டிருக்கும் "சம்ஸ்கிருத சுலோகங்கள்" அவரை சும்மா இருக்கச் செய்யுமா? அல்லது விடடு விடுமா? ஒருக்காலுமில்லை. இருக்க இடமின்மையினாலேயே ஆதிதிராவிட இளைஞர்களுக்கு கற்பித்து உருபோடக்கூற சந்தர்ப்பமும் வாய்ந்துவிட்டது. இவர் கூறும் ஒவ்வொரு சொற்பொழிவிலும் தீண்டாமைக்கு சாஸ்திரத்தில் இடமில்லை என கூறி வந்திருப்பதை நாம் படித்துள்ளோம். ஆயினும் சென்ற வாரம் பண்டிதர் தலைமையின்கீழ் நடைபெற்ற பஞ்சாப் சனாதனதர்ம மகாநாட்டின் சொற்பொழிவையும், தீர்மானங்களையும் கவனிப்பின், இவரது தீண்டாமை விலக்கின் கருத்து என்ன? என்பது தெற்றென விளங்கும். பண்டிதர் தீண்டாமையைப் போக்க ஒரு புறம் புணூலை அணிவிப்பார் மறுபுறமே சமபந்தி போஜனத்தை எதிர்த்து அதனால் பலத்த தீமைகள் ஏற்படுமெனக் கூறுவார். இந்த செய்கையே பஞ்சாப் சனாதன தர்ம மகாநாட்டிலும் நடைபெற்றதைக் குறித்து எவ்வித ஆச்சரியமுமில்லை. இவர் தலைமையின் கீழ் நடை பெற்ற மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஓர் தீர்மானத்தின் சுருக்கமாவது:—தீண்டாமைக்கு இந்து மதசாஸ்திரங்களில் எவ்விதமான ஆதாரவுமில்லை. ஆனால் தீண்டாமையை போக்க சட்டசபையும்-அரசாங்கமும் எவ்வித சட்டத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்பதாகும். இந்த தீர்மானத்தை வாசிக்கும் ஒவ்வொரு நண்பர்களும் பண்டிதரின் மனப்பான்மையை நன்கு அறிந்துகொள்ளுவர். உண்மையாகக்கூறமிடத்து தீண்டாமை இந்து சமூகத்தை விட்டு விலக வேண்டும் என்ற மனப்பான்மை அமைந்திருப்பின் பண்டிதர் இத்தீர்மானத்தை நிறைவேற்ற இடங்கொடுத்திரார் என்பது நமது அபிப்பிராயம். அறிவீனத்தில் ஆழ்ந்து-அஞ்ஞானத்தில் மூழ்கிக்கிடக்கும் பாமர மக்களுக்கு 'ஞான' ஒளியைக்கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு பண்டிதரைப்போன்ற அறிஞர்களுக்கே அமைந்திருக்கின்றது. ஆனால் இதற்கு முற்றிலும் முரண்பாடாக பாமர மக்களுக்கு இன்னும் 'அஞ்ஞானத்தையே' புகட்டுகின்றமையின் அதன் பயன் வெகு விரைவில் விளங்கிவிடும். இன்றைய மக்கள் அறிவீனத்தைப்போக்க முற்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். நாளடைவில் அறிவு-ஆராய்ச்சியைப்பெற்று வருகின்றனர். இத்தருவாயில் பண்டிதரின் மகாநாட்டு தீர்மானம் பெருவாரியான மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பது நிச்சயம். நடை முறையில் அனுசரிக்கப்பட்டுவரும் தீண்டாமையை போக்க வேண்டுமென ஒரு புத்துணர்ச்சி ததும்பி-அறைகூவிக்கொண்டு வரும் இந்நாளில், அதற்கேற்ப அரசாங்கத்தார் செவி சாய்த்து சட்ட மூலமாக சட்டமேற்படுத்தப் போவதென்றால்-அதனால் என்ன தீமை விளையப் போகின்றதோ அதை நாம் அறிகிலோம்! ஆனால் ஒரு சில பண்டிதர்கள்-ஒரு சில வைதீக சனாதனிகளின் கோடாக்கினிக்கு இரையாகவும் நேரிடலாம். அதைப்பற்றி அவசியமில்லை. ஒரு விஷயத்தையோ அல்லது எந்த விஷயத்தையோ நாம் எடுத்துக்கொண்ட போதிலும் பலருக்கு சாதகமாகவும்-சிலருக்கு பாதகமாகவும் விளைவது இயற்கையே. ஆனால் நாம் முக்கியமாக கவனிப்பதற்குரியது பல மக்களின் நன்மையேயாகும் ஒரு சிறு வகுப்பின் நிலைமையை விடவும்தான் வேண்டும். இவ்வகையில் கூட இன்று தீண்டாமை என்பது ஓர் பெருத்த கொள்ளை நோய்-அதை கட்டாயம் ஒழித்து தான் தீரவேண்டுமென்ற பேரவா நிலவி வரும் இந்நாட்களில் இதற்கு முற்றிலும் முரண்பாடாக பண்டிதர் தலைமையின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் குறித்து நாம் வருந்துகின்றோம். ஆனால் பொது மக்கள் இந்த ஏமாற்றத்தினின்றும் வேண்டியதைச் செய்ய எச்சரிக்கின்றோம். இந்தியாசீர்திருத்தமடைய பண்டித மாளவியா போன்ற "வழ வழ-கொழ-கொழ" பெரியார்களை எதிர் பார்ப்பது-மண் குதிரையைநம்பி-ஆற்றில் இறங்கினாற் போலாகும் என்பதில் ஐயமில்லை.

அபேதவாதம்.

தோழர் மாசானி.

சுயராஜ்யக் கட்சியினர், முழுவதும் அபேதவாதக் கொள்கை கொண்ட திட்டத்தைக் கைக்கொள்ளாவிடினும், பூர்ண சுதந்தர லடசியம் கொண்டதாகவாவது இருக்கவேண்டுமென்று பிரயத்தனப்படவே, நான் ராஞ்சி சென்றிருந்தேன்.

கேட்டுப்போவார்கள்

அபேதவாதக் கொள்கையைக் கொண்ட திட்டத்தைத்தான் ராஞ்சியில் தயாரிக்கப் போவதாக டாக்டர் அன்சாரி வாக்களித்திருந்தார் ஆனால் கராச்சி காங்கிரசில் செய்த தீர்மானத்தின் சில பகுதிகளே ராஞ்சியில் தீர்மானிக்கப்பட்டன. அக் கூட்டத்தில் பிரேரணை செய்த திருத்தப் பிரேரணையும் நிராகரிக்கப்பட்டது. சட்டசபையில் ஒத்துழையாமை செய்வதென்று சொல்லிக்கொண்டு செல்லும் சுயராஜ்யக் கட்சியினர், ரெஸ்பான்சிவிஸ்ட் பரஸ்பர ஒத்துழைப்பாளர்களாகவும் பிறகு முழு ஒத்துழைப்பாளர்களுமாக மாறிவிடுவார்கள்.

வெள்ளை அறிக்கையின் சாவு என்று கருதுகிறார்கள். சட்டசபையில தீர்மானம் நிறைவேற்றியபின் என்ன செய்யப்போகிறீர்கள்? என்று கெட்டால் பதில்கிடையாது. ஆனால் வெள்ளைக்காரன், சுயராஜீயக் கட்சிக்காரர்கள் சட்ட சபையில் தீர்மானம் செய்வதின்மூலம் வெள்ளையறிக்கைத் திட்டம் பறந்துபோய்விடாமல் பலப்படுத்திக்கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை.

ஜவஹர்

பண்டித ஜவஹர்லால்நேரு வெளியேயிருந்தபோது சொல்லிக்கொண்டிருந்த பிரதிநிதித்துவம் வாய்ந்த சபையைக் கூட்டி இந்தியாவுக்கு வேண்டிய அரசியல் திட்டத்தை ஸ்தாபிப்பதென்னும் அபிப்பிராயத்தை மாத்திரம் ராஞ்சியில் தீர்மானித்துவிட்டார்கள்

ஆனால் வயது வந்த ஒவ்வொரு இந்திய ஆண், பெண் அனைவரும் வாக்காளர்களாகவேண்டும். அப்படிப்பட்ட வாக்காளர்களைக்கொண்டு பிரதிநிதித்துவம் வாய்ந்த சபையைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று ஜவஹர்லால் சொல்லி வந்ததைக் காற்றில் விட்டுவிட்டார்கள். மிகவும் முக்கியமானதை விட்டு மற்றொன்றைப் பற்றிக்கொண்டார்கள்.

தலையிலடிக்க

சத்தியமூர்த்தி செய்த பிரசங்கத்தில் குட்டு வெளியாகிவிட்டது. லோதியன் கமிட்டியினர் செய்த சிபார்சுப்படிக்கு25 கோடி ஜனத் தொகை கொண்ட இந்நாட்டில் 3 கோடி 50 லட்சம் பேர்களை வாக்காளர்களாக்குவதென்பதை ஒப்புக்கொண்டு அந்த வாக்காளர்களால் பிரதிநிதித்துவ சபை நிறுவப்பட வேண்டுமென்று கூறினார். மேலும் பண்டித ஜவஹர்லால் வகுப்புவாதப் பித்தம் கொண்டவர்களைத் தலையிலடிக்கவேண்டுமென்று கருதினார். சுயராஜ்யக் கட்சியினரோவெனின் மற்றுமோர்சர்வ கட்சி மகாநாட்டிற்கு இடம் கொடுக்கக்கூடியதாக தீர்மானங்கள் செய்திருக்கின்றனர்.

ஒரு வழி

ஆகையால் இனி காங்கிரஸ் அபேதவாதியினருக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, அகில இந்திய காங்கிரஸ் அபேதவாதக் கட்சி மஹாநாட்டையும், மே மாதம 18, 19ந் தேதிகளில் பாட்னாவில் கூட்டி, அ. இ. கா. கமிட்டியை மாற்றுவது. அங்கு ஒன்றும் பலிக்காவிட்டால் காங்கிரஸ் மஹாசபையைக் கூட்டி சட்டசபைப் பிரவேசத்தை ஒப்புக் கொண்டு, அபேதவாதக் கொள்கை கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றுமென்றேபாகும்.

சுயராஜியக்கட்சி என்பது
சுத்தப்பார்ப்பனர்கள்
நிறைந்ததாகும்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நிலங்களை விற்று கடனைக் கட்டிவிட
லாம் என எண்ணிக்கடன் வாங்கி
எதாகச் சொல்லுகிறார்கள். இதுவும்
சரியான மாதிரியல்ல நிலங்களின்
விலை கூடுமென்பது உறுதியல்ல.
தற்காலம் போன்ற காலத்தில்
குறையும் என்பதுதான் உறுதி.
வட்டி மாத்திரம் நாள்தோறும்கூடும்
என்பது உறுதி. விலை கூடுவது
உறுதியில்லாத ஒரு பொருளைநம்பி,
உறுதியாகக்கூடிய வட்டிக்கடனை
வாங்குவது சற்றேனும் அறிவுடைமை
யாகாது. அந்நிலையில் சொத்தைவந்த
விலைக்கு விற்றுக் கடனைத்தீர்த்து
விட்டு மீதத்தைத் தொழிலாளருக்கு
பொருத்தமான வழியில் சேமித்து
வைப்பதுதான் சிறந்த மாதிரியாகும்.
தொழிலாளர் தங்கள் நிலைக்குத்
தக்கவாறு சிறு தொகைகள் கடன்
வாங்க நேரிட்டாலும்இருப்புப்பாதை
முதலாளிகளி-மிருந்து பிராவிடெ
ண்டு பணத்திலிருந்தாவது
கூட்டுறவு சங்கங்களிலிருந்தாவது
குறைந்த வட்டிக்குக் கடன் வாங்க
வேண்டுமே யொழிய வெளியே வட்
டிக்குக் கடன்வாங்குவ
தை நீக்க வேண்டும்.

சடங்குச் செலவு, வட்டிச் செலவு
போலவே இன்னொரு பெருஞ்
செலவு. நகைக்கும் உடைக்கும்
பணத்தை விரையப் படுத்துவது.
நகையில் முடக்கியிருக்கிற தொகை
யை வரும்படி தரக்கூடிய ஒரு
இனத்தில் போட்டுவைத்திருந்தால்
அதிலிருந்து வரக்கூடியவரும்படி ஒரு
கணிசமான தொகையாயிருக்கும்.
அதை இழப்பது ஒருபுறம். நகை
செய்வதில் இழக்கும் பொடிக் கூட்டு,
தேய்வு, களவு, கூலி, இவைகள்
ஒருபுறம். நகை அணிந்திருப்பதில்
தேய்வு, திருடு, திருட்டைத் துலக்க
முயல்வதில் செலவு இவைகள் ஒரு
புறம், காலத்துக்குத் தக்கபடி நகை
களை அழித்து அழித்தும் புது நகை
கள் செய்வதில் அழிவு, கூலி, இவை
கள் ஒருபுறம். இவ்வாறு நகையால்
நம்முடைய வரும்படியும் சேமிப்பும்
வீணில் அழிவதை நாம் தடுக்காம
லிருப்பது சரியல்ல. பெண்டிர்கள்
நகையை விரும்புவார்கள் என்று
சொல்வதும் சரியல்ல. பெண்டிற்
கள் தங்களுக்கெனத் தனிச்சொத்து
இருக்கவேண்டுமென்று விரும்புகி
ன்ர்கள் என்பதே உண்மை. தனிச்
சொத்தாக வைத்திருப்பதற்கு வேறு
வழி இல்லாத படியால், இவ்வளவு
இக்கட்டுக்கும் உட்பட்டாவது நகைச்
சொத்துவைத்துக் கொள்ள விரும்பு
கிறார்கள். வரும்படி வரக்கூடிய,
பிறர் அபகரிக்க இடமில்லாத, வேறு
சொத்துக்கு இடமிருந்தால் அதை
அவர்கள் விருப்பத்துடன் ஏற்றுப்
போற்றி வைத்துக்கொள்
வார்கள். பொருளை வீணுக்குவ
தைத் தடுக்க விரும்புவோர்
இதையும் கருத்துள் வைத்துத்
தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டு
மென்பது எனது கோறிக்கை இன்
னும் பெருங்குடியாகிய கள், சாரயம்
முதலியவைகளிலும், பெரும்போர்தை
பொருளாகிய அபின், கஞ்சாமுதலிய
வைகளிலும் சிறு போதைப் பொரு
ளாகிய புகையிலை முதலியவைகளி
லும், செலவிட்டு உடலையுங் கெடுத்து
நடமாடும் இடத்தையும் அருவருப்புக்
குள்ளாக்கி வீணுக்கும் பொருள் எவ்
வளவென்று பாருங்கள். இவ்விதம்
பெரும் வீண் செலவுகளுக்கு அடி
மைப்பட்ட நமது மனப்பான்மை
யில் நம்மை அறியாமலே தடுக்கக்
கூடிய பல்வேறு சிறு செலவுகளுக்கு
நாமாளாகிறோம். அவைகள் எல்
லாம் ஒருங்கு திரண்டுபெருந்தொகை
யாகும். இவைகளை வீண் போகா
மல் காக்காமல் நமக்கு வரும்படி
போதாது என்று சொல்வதை
உண்மையுணர்வார் ஒப்புக்கொள்ள
மாட்டார்கள். நம்முடைய முறைப்
பாட்டுக்கு காது கொடுக்கவுமாட்டார்
கள் உள்ளவனுக்கு இன்னும் கொ
டுக்கப்படும் என்பது ஒரு முது மொ
ழி. அதாவது தனக்குக் கிடைத்
ததை வீணுக்காமல் காப்பாற்றுகிற
வனுக்கு இன்னும் கொடுக்கப்படும்.
ஒரு குழந்தைக்கு ஒரு சாமான் வாங்
கிக் கொடுத்தால், அதை அது கெடு
த்து விடாமல் வைத்திருந்தால் அது
கேட்காமலே மறு சாமான் வாங்கிக்
கொடுக்க நமக்கு விருப்பம் வரும்.
முதலிற் கொடுத்த சாமானைக் கெடு
த்துவிட்ட பிள்ளைக்குப் பின்னொரு
சாமான் அது கேட்டாலும் வாங்கிக்
கொடுக்க மனம் வராது. அதே
போன்று நாம் பெறுகிற வரும்படி
யில் மேலே சொன்ன வீண் செலவு
களை எல்லாம் நீக்கி நல்வழிச் செலவு
செய்து மீதத்தை சேமித்து வந்தோ
மானால் நாம் வாய் விட்டுக் கேடகா
மலே மனம்போல் வாழ்வு என்ற
சொற்படி புதுவரும்படி பெருகிக்கொ
ண்டே இருக்கும்.

மேலே சொன்ன அளவு குற்ற
முள்ளவையல்ல வாயிலும், நமது
பணச் சேமிப்புக்கு இடையூறுயுள்ள
இன்னும் சில வழக்கங்களும் நம்மி
டம் இருக்கின்றன. நம்முடைய
குடும்பச் செலவுக்கு வேண்டிய கடை
சாமான்களை ஒவ்வொருவரும் தனித்
தனியே வாங்குவதை விடப்பலர்
கூட்டாகச் சேர்ந்து சாமான்களை
வாங்கிப்பிரித்துக் கொள்வது நமது
செலவுகளைக் குறைக்க ஒரு நல்வழி.
கூட்டுறவுப் பண்டகசாலை போலவே
கூட்டுறவு சாப்பாட்டு விடுதியும் ஏற்
படுத்தலாம். செலவைக் குறைப்
பதற்கு அது இன்னும் சிறந்த ஓர்
வழியாகும். செலவு குறைவது மாத்
திரமல்ல; நேரமும் மீதப்பட்டு அந்
நேரத்தை வருவாய் வரக்கூடிய ஒரு
வழியிலோ, கல்வி, அறிவு, இவை
களைப் பெருக்கும் வழியிலோ செலவு
செய்யலாம்.

ஜப்பானியர் தங்கள் துணிகளைப்
பெரிதுங் குறைந்த விலைக்கு
விற்பனை செய்வதற்கு ஒரு கார
ணம், ஆலைத் தொழிலாளர்கள் எல்
லாரும் ஆலையிலேயே ஒன்றாகச் செ
லவு செய்து சாப்பிட்டு அதனால்
செலவைக் குறைத்துக் கொண்டது
என டில்லி சட்ட சபையில் ஒருவர்
சொன்னார். இதை உடனே எல்லா
ரும் ஒன்றாகத் துவக்காவிட்டாலும்,
ஒன்றாகச் சாப்பிடப் பழக்கப்பட்ட
சிலர் அல்லது பலர் கூடிச்செய்து
நன்மையடையலாம்.

இவ்வாறு பலவழிகளில் சேமித்த
பொருளை உங்கள் இருப்புப் பாதைப்
கூட்டுறவு சங்கத்தில் சேமிப்புத்
தொகையாகவாவது, அல்லது தபா
லாட்பீஸ் சேமிப்புப் கணக்கிலாவது,
மாதந்தோறும் போட்டுவருவது தொ
ழிலாளருக்கு ஏற்ற சிறந்த வழியா
கும் கண்ட இடங்களில் எல்லாம்
சீட்டுப் போடுவதும், கடன் கொடுப்
பதும், தொழிலாளர்களுக்குப் பெரு
ம்பாலுங் கேட்டை விளைவிப்பதே
யாகும். தொழிலாளர் சங்கத்தார்
உறுப்பினர்களை எல்லாம் மாதம் ரூ.
ஒன்றாவது (நாள் ஒன்றுக்கு அரை
அணு ஆகிறது) இவ்வாறு சேமிக்கக்
கட்டாயப் படுத்தி ஆண்டு தோறும்
ஒவ்வொரு உறுப்பினர் கணக்கிலும்
எவ்வளவு சேமிக்கப்பட்டிருக்கிற
தென்பதையும் வட்டி எவ்வளவு
சேர்ந்திருக்கிற தென்பதையும்ஆண்டு
நிறைவுக் கணக்கிற்காட்டி ஊக்கப்
படுத்த வேண்டும்.

இப்படிச் சேர்த்த வரும்படி கணி
சமான ஒரு தொகையாகச் சேர்ந்த
வுடன் அதை உங்கள் இருப்புபபா
தைப் பங்கிலாவது அதன் கடனிலா
வது போட்டு வைப்பது சிறந்தவழி
யாகும். உங்கள் இருப்புப்பாதைப்
பங்குதொகைக்கு 100க்கு $3\frac{1}{2}$
வீதம் வட்டி கொடுப்பதாக அரசாட்
சியார் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.
சென்றபல ஆண்டுகளாக அந்தப்
பங்குத் தொகைக்கு 100க்கு 8
வீதம் ஈவுத் தொகை கிடைத்துக்
கொண்டு வந்திருக்கிறது. நாம
போட்டி போட்டுக்கொண்டு நம் பண
த்தைக் கொட்டி வாங்குகிற நிலச்
சொத்திலிருந்து மேலே கண்ட
படி சர்க்கார் பொறுப்பேற்றிருக்கிற
$3\frac{1}{2}$ வட்டிகூட பெரும்பாலான நிலத்
தில் தேறாது. நிலத்தில் 8 வட்டி
கிடைப்பது அருமையிலும் அருமை.
நிலத்தில் வரும்படி செய்து அதை
வீடுகொண்டு சேர்ப்பதில் இருக்கிற
சங்கடங்கள் எவையேனும் இருப்புப்
பாதைப் பங்குச் சொத்து வரும்படி
யில் கிடையா- எந்த நிலத்திலும்
வரக்கூடிய வரும்படிக்கு இருப்புப்
பாதைப் பங்குச் சொத்துக்கு இருப்
பது போன்று அரசாட்சியார் பொறு
ப்புக் கிடையாது. தென் இந்திய
இருப்புப்பாதையை நடத்தும் உரி
மையும் பொறும்பும் கூட்டாகச்
சேர்ந்த சில முதலாளிகளிடம் ஒப்ப
டைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்
விடுமுதல் பங்கு 1க்கு 10 பவுன்
வீதம் லக்ஷம் பங்குகளுடைய பத்து
லக்ஷம் பவுன் ஆகும். இலாபத்திலி
ருந்து எடுத்து ஒதுக்கி வைக்கப்
பட்ட பணமும் சேர்ந்திருக்கிறபடி
யால், துவக்கத்தில் பத்துப் பவுன்
விலையுள்ள ஒரு பங்கு இப்பொழுது
விலையில் உரியபடி கூடியிருக்கும்.
சொற்ப விலைக்கு ஒரு நிலத்தை
வாங்கி அதில் வந்த வரும்படியிலிரு
ந்து அந்த நிலத்தில் சில மாங்கன்று
கள் வைத்தஒரு நினைறும் தோண்டி
னுல் எப்படி அந்த நிலத்தின் விலை
கூடுமோ, அதே மாதிரி இப்பங்கு
களின் விலையும் கூடி இருக்கின்
றன. இதைத்தவிர இந்த இருப்புப்
பாதையில் நூற்றுக்கு 4, $4\frac{3}{4}$, 5
வட்டிகளில் $4\frac{1}{4}$ லக்ஷம் பவுன் கடன்
பத்திரங்களும் வெளியிட்டிருக்கிறார்
கள். அவைகளிலும் அவரவர்கள்
நிலைமைக்குத் தக்கபடி பணம் போ
ட்டு வைக்கலாம். இக்கடன் பத்தி
ரங்களுக்கும் அரசாட்சியார் பொறுப்
பேற்றிருக்கிறார்கள். தொழிலாளி
களுக்கு நிலச் சொத்தைவிட இது
சிறந்த சொத்தாகும். இதை எப்
பொழுது வேண்டுமானாலும் எளிதில்
வாங்கவும் விற்கவும் போதிய வசதி
களிருக்கின்றன இப்படிச் செய்வ
தால் முதலாளிகள் தொழிலாளிகள்
என்ற வேற்றுமை நீங்கி, ஒருவருக்
கொருவர் உள்ள ஒற்றுமை உயர
இடமாகும். இவ்வேற்பாட்டைஇரு
ப்புப்பாதையில் பங்குள்ள முதலாளி
மார்கள் எல்லாம் விருப்பத்துடன்
வரவேற்பார்கள். உங்கள் இருப்புப்
பாதையில் வேலை பார்ப்பவர்கள்
எல்லாரும் சேர்ந்து 35,000. உங்
கள் சேமிப்பை எல்லாம் இருப்புப்
பாதைப் பங்கு அல்லது கடன் பத்தி
ரச் சொத்தாக மாற்ற உங்கள் இருப்
புப் பாதையிலேயே வேண்டிய இட
மிருக்கிறது. எதாவது காரணத்
தால் தென்னிந்தியா இருப்புப்பா
பாதைப்பங்குகள் கிடைக்காவிட்
டால், வேறு இருப்புப்பாதைப் பங்கு
களிலாவது, சரக்கப்பங்குகள் ஆலைப்
பங்குகளிலாவது, அவைகளுக்கிடை
க்காவிட்டால், அரசாட்சிக் கடன்
பத்திரத்திலாவது, தபாலாபீஸிலா
வது, கணிசமாகத் திரண்ட தங்கள்
சேமிப்பைப் போட்டு வைப்பது
தான் தொழிலாளருக்குச் சிறந்த
சொத்தாகும். நீங்கள் நிலச்சொத்
தை வாங்குவது உங்களைவிடக்குறை
ந்தவரும்படியுள்ள பயிர்த்தொழிலாளி
களின் வரும்படியைப் பங்கிடப்போ
னதாகும். நீங்கள் உங்கள் தொழிற்
சொத்தை உடையவர்களாகவேண்டு
மென்று விரும்புவது போல், பயிர்த்
தொழிலாளர்களையும் அவர்கள் தொ
ழிற் செய்யும் நிலச்சொத்தை உடை
யவர்களாகத் தூண்டுவது நீங்கள்
அவர்களுக்கும் உங்களுக்கும் காட்டி
ற்கும் செய்யும் நல்தொண்டாகும்.
அவர்களுடன் போட்டி போட்டு
அந்நிலங்களை வாங்க முயல்வது நன்
றன்று- உங்கள் தற்காலத் தொழிலை
விட்டு விட்டுப் பயிர்த்தொழில்
செய்ய நினைக்கும்பொழுது நீங்கள்
பயிர் நிலங்களை விலைக்கு வாங்க
லாம் அதுவரை உங்கள் சொத்து
உங்கள் தொழிலிலேயே இருப்பது
தான் நன்முறையாகும்.

உங்கள் சொத்து உங்கள் தொழிலிலேயே இருப்பது தான் நன்முறையாகும்.

இருப்புப்பாதைத் தொழிலாளர் சங்கம் முதலாளிகள் உதவியால் தொழிலாளர் நிலைமையை மேம் படுத்துவதற்கான வேலைகளை எல்லாம் செய்கின்றன. முதலாளிகளை எதிர்பாராமல் தங்கள் மேம்பாட்டிற்காகச் செய்ய வேண்டிய சில திட்டத்தை நான் மேலேவிளககினேன். தொழிலாளர்கள் இருப்புப்பாதை வரும்படி உயர்வதற்கான வேலையையும் செய்ய வேண்டுமென்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். அவ்விதம் செய்யக்கூடிய வழி இருக்கிறதா என்பதை உங்கள் சங்கத்தார் ஆராய்ந்து அவைகளையுங் கைக்கொள்ள வேண்டு(. சுவரை வைத்தல்லவா சித்திரம் எழுத வேண்டும். உங்கள் மேம்பாட்டிற்கு இருப்புப்பாதை செழிப்பாயிருக்க வேண்டியது எல்லாவற்றிற்கும் முந்திய ஒரு நிலைமையாகும். இருப்புப்பாதை வரும்படி உயர்வதற்கு நீங்கள் எல்லாரும் செய்யக்கூடிய எளிய வழி வெளியானதைய எனக்குத் தோன்றுகிற தொன்றைக்கீழே விளக்குகிறேன். இதைப்போன்று வேறு வழிகளும் ஊன்றி ஆராயின் உங்களுக்குப்படலாம். மக்களை ஏமாற்ற காவி உடை பூண்ட, மொட்டை அடித்த, சடை வளர்த்த, வேறு வழியில் உருமாறிய, பலர் பணங்கொடாமல் இருப்புப்பாதை வண்டியில் போவதை நாம் அடிக்கடிபார்க்கிறோம். இவர்களைத் தடுப்பதற்கென நியமிக்கப்பட்ட வேலைக்காரர்கள் தனித்து இதை நிறுத்த முடியவில்லை. மற்ற இருப்புப்பாதை வேலைக்காரர்களிற் சிலர் சுவடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்துத் தங்களுக்குப் பகமோ, புண்ணியமோ தேட முயலுகிறார்கள். இது பெரும் அறிவற்ற செயல். இவ்விதம் இருப்புப்பாதை வரும்படி சிதறுற உங்களிற் சிலர் உதவி செய்து கொண்டும் பிறர் அதைத்தடுக்க வழி தேடாமலும் இருந்தால், உங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்ய முதலாளிகளுக்கு இருக்க வேண்டிய பணம் அந்த மட்டில் குறையுமென்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். நீங்கள் இப்படிச் சேர்த்துக் கொடுக்கக் கூடிய தொகை இம்மியாயிருக்கலாம். பல இம்மி சேர்ந்துதான் கோடி ஆகிறது. அரை அணுவுக்கு ஒரு ஆளை வண்டியிலேற்றிகொண்டு போய்த்தான் இருப்புப்பாதை கோடிக் கணக்காகப் பொருள் திரட்டி உங்களுக்கும் சம்பள முதலியவை தருகிறது. ஆகையால் பிறர் திருடுவதால் குறைகிற, நான் மேலே சொன்ன இருப்புப்பாதை வரும்படி குறையாதபடி காக்க, நீங்கள் எல்லாரும் ஒன்றுபட்டு முயல்வது, உங்கள் வரும்படியை உறுதிப்படுத்தும் முதல் வேலையாகும் என்பதை நான் வற்புறுத்துகிறேன். இவ்வித உங்கள் முயற்சி, முதலாளி தொழிலாளி வேற்றுமைகளை முற்றும் ஒழிப்பதற்கான சிறந்த சிறு வழியாகும் என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

உங்கள் நிலைமையையும், முயற்சியையும் நேரில் தெரிந்து கொள்ளவும், அதன் வழி என் அறிவு வளர்ச்சிக்கும் இடந்தந்துதவிய உங்கள் அன்பிற்கு இன்னொரு முறை நன்றி கூறுகிறேன்.

மார்க்ஸூம் லெனினும் காட்டிய வழியில் தீர்க்கமாயுழைக்கத் தோழர்காள் வருக!

மலையாளம் சில்க் & புளாவைகள்.

2¼ வீதி 5 நீளம்பட்டு 1-க்குரூ. 1-6-0	2½ வீதி 12நீளம் ரேஸ்சேலை 1-க்குரூ. 3
ஷை கம்பிக்கரை டசன்ஷை 11-0-0	ஷை 11நீளம் அறக்குசேலைஷை 3-8-0
ஷை 4½ நீளம் டசன் ஷை 10-0-0	ஷை 7 நீளம் தாவணி ஷை 1-12-0
3 வீதி 8நீளம் வேஷ்டிஷை 3-8-0	எல்லா கலர்களிலும கிடைக்கும்

S. K. R. வீவவிங்பாக்டரி, கோட்டார், திருவாங்கூர்.



"பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்திலுல் தயார்செய்யப்படுவது. வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஸ்டாக்கிஸ்ட்
A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, சென்னை.



'சுந்தரி ஸ்னோ.'

ஒரு சுந்தரிஸ்னோ வாங்குவோருக்கு ஒரு கைகுட்டை இனாம்.

சுந்தரி ஸ்னோ தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமழ்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட்:- A. V. R. A.
அடைக்கப்ப செட்டியார்,
52-பந்தர் தெரு, சென்னை.

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற முடிவு தேதி 15-5-34

முதல் பரிசு பெற்றவர்.

தக்க சமயத்தில் சந்தா செலுத்தி பெரும் பயன் பெற ஓர் அறிய சந்தர்ப்பம்!

மியூட்சுவல் கிளப்

டெர்பி

6—6—34.

உடனே உங்கள் சந்தாவை கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி டிக்கட் பெற்றுக்கொள்ளுங்கள்.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜண்டு:—

S. K. வரதராஜுலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணு 8.

லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணு 4.

பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணு 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணு 4.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணு 8.

இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

பாலகாண்டம் அணு 4.

அயோத்தியாகாண்டம் அணு 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணு 4.

தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணு 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணு 3.

பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணு .4.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகக் [illegible] ணமாக ஓர் கட[illegible] [illegible]ற்றத்திற்குக் காரண[illegible] [illegible]ருக்க முடியாது என்பதையும் விஞ்[illegible] பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணு 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணு 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணு 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணு ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

பகுத்தறிவு.

சுயமரியாதை தினசரி.

சமய சமூக அரசியல் விடுதலைக்கு பரிந்து போராடும் தமிழ் தினசரி இது ஒன்றே. சர்வ தேசசம்மந்தமான விடுதலைபோராட்டச்செய்திகள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும். ஆணித்தரமான அபிப்பிராயங்களும், அழுத்தமான கண்டனங்களும், அவசியம் காணலாம்.

எங்கும் கிடைக்கும்.

தனி இதழ் காலணா.

தபாலில் மாத சந்தா ஒரு ரூபாய்.

ஆறு மாத சந்தா ரூ. 5.

வருட சந்தா ரூ. 9.

விலாசம்:— மானேஜர்,

"பகுத்தறிவு" ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.